# LAABH SAMACHAR

Volume: 09 | Issue : 06 | SEPTEMBER 2020 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE






SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors




Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks




Open-well Submersibles

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அக்டோபர் 2, 1869 அன்று இந்திய நாட்டின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் எனும் ஊரில் கரம்சந்த் உத்தம்சந்த் காந்தி மற்றும் புத்லிபாய்-க்கு மகனாகப் பிறந்தார். மகாத்மாக காந்தி என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக தலைமையேற்று நடத்தியதன் காரணமாக விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். சத்தியாக்கிரகம் என்றழைக்கப்பட்ட இவரது அறவழிப் போராட்டம் இந்திய நாட்டு விடுதலைக்கு வழி வகுத்ததுடன் மற்ற சில நாட்டு விடுதலை இயக்கங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்தது.

**அக்டோபர் 2 - ஒருவர் இத்தினத்தில் பிறந்தார், இன்னும் மறையவில்லை. மற்றொருவர் மறைந்தார், பிறக்கவேயில்லை.**

காமராஜர் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்களுள் ஒருவராவார். இவர் 1954-ம் ஆண்டு அப்போதைய சென்னை மாநில முதலமைச்சர் ஆனார். இவர் ஒன்பது ஆண்டுகள் தமிழகத்தின் முதல்வராகப் பதவி வகித்தார். மதுரை ஸௌராஷ்ட்ர மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதைப் பார்த்து, அது போல தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். காமராசர் எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர். இவரை, தென்னாட்டு காந்தி, படிக்காத மேதை, அரசரை உருவாக்குபவர், பெருந்தலைவர் என்றெல்லாம் புகழ்வர். இவர், கருப்பு காந்தி என்றும் அன்போடு அழைக்கப்படுகிறார். காமராசரின் மறைவுக்கு பின், 1976ல் இந்திய அரசு இவருக்குப் பாரத ரத்னா விருது வழங்கியது.



## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அல்கிதெ ச்சோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

கடந்த செப்டம்பர் 1-ம் தேதி முதல் ஏற்குறைய அனைத்து வகையான தடைகளுக்கும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். இப்பொழுதுதான் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய நேரம். ஏனெனில் கொரோனா என்ற கொடிய தொற்று இன்னும் நம்மை விட்டு முழுமையாக நீங்கவில்லை. எனவே தொய்வின்றி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் படி அனைத்துவித தடுப்பு நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எந்த ஒரு சிறு அலட்சியமும் நமது தொழிலை பாதிக்கும் என்பதை நன்கு நாம் அறிவோம். தொடர்ந்து கண்காணிப்பை பலப்படுத்தி நமது மாவட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் முன்னோடி தொழிலதிபர் வசந்த & கோ. நிறுவனத்தின் உரிமையாளர் திரு. **எச். வசந்த குமார்** அவர்களின் இழப்பு, ஈடு செய்ய முடியாதது. அரசியல் பிரமுகர், சிறந்த மேடைப்பேச்சாளர். இவர், 2015ம் ஆண்டில் நடைபெற்ற நமது சேம்பர்-ன் சிட்கான் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நமது சேம்பர் அங்கத்தனிர்களுக்கு தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு ஆலோசனைகளை தந்து நமது சமூக மக்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்தவர். ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறது.

கொரோனா பெருந்தொற்றின் அசாதாரண சூழல் காரணமாக ஆண்டு பொதுக்குழு கூட்டத்தை நடத்த வரும் டிசம்பர் மாதம் வரை அரசு அவகாசம் அளித்துள்ளது. ஆகவே, சேம்பர்-ன் 14ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் அரசின் அனுமதிக்குப்பின் அறிவிக்கப்படும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி — குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்**

ஸௌராஷ்ட்ர மொழியில்: பகர்முப[3]லம் ஸொந்தப[3]லம் ஸத்ரு ப[3]லம்அங்கு[3]
ஸெங்கு[4]ப[3]லம் ஜன்லி கரனு

**பொருள்:** (செய்யக் கருதுகின்ற வேலையின் கடினத்தையும் அதைச் செய்து முடிக்கத் தனக்குள்ள வல்லமையையும், (அந்த வேலையைக் கெடுக்கக்கூடிய பகைவன் இருந்தால்) அவனுடைய வல்லமையையும், (தனக்கும் அந்த பகைவனுக்கும்) துணை வரக் கூடியவர்களுடைய பலத்தையும் நிறுத்து அளந்துகொண்டு அதன் பிறகு செய்ய வேண்டும்.

**அதிகாரம் 48** | **வலியறிதல்** (தனக்குள்ள சக்தியின் அளவை அறிவது) | **அரசியல்**

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

31.08.2020 – சேம்பர் அங்கத்தினர் திரு. யாகேஸ்வரன் அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு சேம்பர் வாழ்த்துக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

31.08.2020 – சேம்பர் அங்கத்தினர் R.S.R. டிரேடர் திரு. R.M. ஆனந்த் பாபு அவர்களின் R.S.R. ஆயில் மில் திறப்பு விழா அழைப்பினை ஏற்று சேம்பர் வாழ்த்துக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

01.09.2020 – மூன்றாம் பார்வை என்ற பெயரில் புதுமையான கூட்டம் துவக்கி, முதன்முறையாக, அரசியலில் நம் சமூக மக்களின் பங்கு என்ற தலைப்பில் மாலை 6 மணி அளவில் ஜும் செயலில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக சமூக ஆர்வலரும், மினர்வா பிளாஸ்டிக் இண்டஸ்டிரீஸ் உரிமையாளருமான திரு. N.R.R. கோபி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத்தலைவர் திரு. T.R. சரவணன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

07.09.2020 – வாழ்த்துக்குழுவின் முதலாம் ஆண்டு நிறைவை அதன் உறுப்பினர்கள் சேம்பரில் நடத்தினார்கள். இந்த கூட்டத்திற்கு சேம்பர் முன்னாள் தலைவர் திரு. S.K.R. ரமேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். குழுத்தலைவர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜீ அவர்கள் ஓராண்டு செயல்பாடுகளை விவரித்தார்.

08.09.2020 – மதுரை பாராளுமன்ற உறுப்பினர் – வங்கி அதிகாரிகள் – சிறு, குறு, நடுத்தர தொழில் முனைவோர், கலந்துரையாடல் கூட்டம் ஜும் செயலியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கூட்டத்திற்கு, பாராளுமன்ற உறுப்பினர் திரு. சு. வெங்கடேசன் அவர்களின் அழைப்பினை ஏற்று ஸௌராஷ்ட்ர சேம்பர் பொதுச் செயலாளர் என்கிற முறையில் இந்த கூட்டத்தில் பங்கு கொண்டு தொழில் துறையினரின் சிரமங்களை எடுத்துரைத்து, தீர்வுக்கு வழி செய்யுமாறு கேட்டுக்கொண்டேன். உடன், செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார் அவர்களும் கோரிக்கைகளை விடுத்தார். அங்கத்தினர்கள் பலர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

– K.K. தினேஷ்

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

ஒவ்வொரு மாதமும் நமது லாப் ஸமாச்சார் இதழை மெருகூட்ட வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சென்ற இதழில் வெளிவந்த புதிய கல்விக்கொள்கை மற்றும் ஸௌராஷ்ட்ர மொழி gboard ஆகியவற்றிற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. முக்கியமாக புதிய கல்விக்கொள்கையில் இடம் பெற்ற வீட்டு மொழிப் பகுதியில் நமது ஸௌராஷ்ட்ர மொழியினை கற்றுக்கொடுக்கும் வாய்ப்பு குறித்து ஒரு பகுதி இன்றளவும் சமூக வலைதளங்களில் உலா வந்து கொண்டிருக்கிறது.

திரு. S.R. **நாகேஸ்வரன்,** திரு. **யோகேஷ் திருக்கொண்டா,** முன்னாள் தலைவர்கள் என அனைவரும் சென்ற இதழைப் பாராட்டிய விதம் எங்களை மேலும் ஊக்கப்படுத்தியுள்ளது. இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் அனைவருக்கும் எங்கள் குழுவின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாத இதழில், மதுரை இரண்டாம் தலைநகர் தகுதி குறித்து திரு. S.R. **நாகேஸ்வரன்** அவர்களின் புள்ளவிபர தகவல்கள், உணவுத்துறையில் இருக்கும் நம் சமூக தொழில் முனைவோர்களின் ஆன்லைன் முறை மற்றும் பல்வேறு தகவல்கம் இடம் பெற்றுள்ளன. வாசகர்கள் படித்து தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- B.S. ஜெனார்த்தனன்

### ஸௌராஷ்ட்ர பொது மக்களுக்கு

புரட்டாசி மாத சனிக்கிழமையன்று (துஸள்) போது, தங்கள் இல்லத்தில் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர நாம ஸ்தோத்ரம் பாராயணம் மற்றும் திருப்பதி ஸ்ரீ வேங்கடேச பூஜை செய்து பிரசாதம் வழங்கப்படும். விருப்பமுள்ள பாக்யவான்கள், குருஜீ, ஸ்ரீ மந் நாயகி ஸ்வாமின் வேத பாட சாலை செல்: 94421 47694, 94875 57694

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc.,
**93441 97952**


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ்
158, தெற்கு மாசி வீதி,
மதுரை – 1.
Ph: 2320536

100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901

ஆடவர் மற்றும் பெண்களுக்கான பிரத்யேக ஆடையகம்
SRB பொட்டிக் BOUTIQUE
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர்,
மதுரை-20 போன் : 4961990

எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk





# அரசியல்
## நம் சமூக மக்களின் பங்கு



SCC PROGRAMME

அங்கத்தினர்கள் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு வகையான தொழில் கூட்டங்களை ஒவ்வொரு மாதமும் நமது சேம்பர் நடத்தி வருகிறது.

இந்த மாதம் முதல், தொழில் மட்டும் அல்லாது தொழிலுடன் இணைந்த பல்வேறு துறை சார்ந்த கூட்டங்களையும் விஷயங்களையும் அங்கத்தினர்களிடம் பகிர்ந்துகொள்வதற்காக இந்த புதுமையான கூட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது. இது ஒரு மூன்றாம் பார்வை நிகழ்ச்சி. அதாவது, நம்முள் இருக்கின்ற, நாம் நினைக்கின்ற / நினைக்கத்தவறிய என நம் சமூகத்திற்கு பயனளிக்கக் கூடிய கருத்துக்களை மக்களிடம் சேர்ந்து செயல் வடிவம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் நடத்தப்படும் நிகழ்ச்சி.

அந்த வகையில், இந்த மாதம் நடைபெற்ற கூட்டமானது தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமாக இதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காக அரசியலில் நம் சமூக மக்களின் பங்கு என்ற தலைப்பிலான கூட்டம் கடந்த 01.09.2020 அன்று மாலை 6 மணி அளவில் ஜூம் செயலியில் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக சமூக ஆர்வலரும், மினர்வா பிளாஸ்டிக் இண்டஸ்டிரீஸ் உரிமையாளருமான திரு. N.R.R. கோபி அவர்கள் கலந்து கொண்டு பேசினார். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத்தலைவர் திரு. T.R. சரவணன் அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. J.S. சாயீஜீவன் அவர்கள் சிறப்பு விருந்தினர் அவர்களை கூட்டத்திற்கு அறிமுகம் செய்தார். அதனை ஏற்று சிறப்பு விருந்தினர் திரு. N.R.R. கோபி அவர்கள் தனது உரையை துவக்கினார்.

அவர் தனது உரையில், 40 வருடங்களுக்கு முன்புவரையில் நமது சமூக முன்னோர்கள் பலர் அரசியலிலும், அதிகாரப்பொறுப்பிலும் இருந்து வந்ததன் காரணமாக சமூகத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் பல்வேறு நன்மைகள் கிடைத்தன.

ஆனால், இடைப்பட்ட இந்த 40 ஆண்டு காலம் நம் சமூகத்தினர் அரசியலில் பங்கெடுப்பதை குறைத்துக் கொண்டனர். இதன் காரணமாக பல்வேறு வகைகளில் நமக்கு தேவையானவைகள் பூர்த்தி அடைவதில்லை. குறிப்பாக, சொந்தமாக தொழில் செய்து வந்த நம் சமூக மக்களில் பலர் விலகிவிட்டனர். இருக்கின்ற சிலரும் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் எதையும் செய்யாமல் இருக்கின்றனர். பல்வேறு காரணங்கள் இருந்தாலும், மிக முக்கிய காரணம், நாம் அரசியலில் பங்கெடுக்காமல் இருப்பது.

நம் சமூக மக்கள் தொடர்ந்து அரசியல் மற்றும் அதிகாரப் பதவிகளில் வரும் பட்சத்தில் தொழில் முனைவோர்கள் முதலில் தங்கள் தொழிலுக்கான பாதுகாப்பைப் பெற முடிகிறது. தொழில் வளர்ச்சிக்கு தேவையான அனைத்துத் தகவல்களையும் எளிதில் பெற்றுக்கொள்ள முடியும், புதிய தொழில் வாய்ப்புகள், தகவல்களை எளிதில் பெற வாய்ப்பாக இருக்கும், புதிய முயற்சிகளை செய்ய இயலும், எந்த ஒரு சூழலையும் தைரியமாக எதிர்கொள்ளும் மற்றும் தொழில் செய்வதற்கு ஒரு தன்னம்பிக்கை பிறக்கிறது என்று கூறினார். அதோடு, நம் சமூகத்திற்கும் எந்த வகையில் நன்மைகள் கிடைக்கும் என்றும் மிக அழகாக கூறினார்.



நிறைவாக, நாம் மீண்டும் அரசியலில் ஏதேனும் ஒரு கட்சியில் தொடர்ந்து பங்கெடுத்து நமது சமூகம் மற்றும் தொழிலை காப்போம், வளர்ச்சி பெறச் செய்வோம் என்று கூறினார்.

சேம்பர் அங்கத்தினர்கள் பலர் அவரை பாராட்டினர். தங்கள் கருத்துக்களையும் பதிவு செய்தனர். கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு நமது சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– இதழ் குழு


Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

ஒரு மாஸ்க்கை 8 மணி நேரம் மட்டுமே அணியலாம்



https://youtu.be/-JMVniVMLr0



PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragrace Pvt. Ltd
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831



# இ.எஸ்.ஐ.சி உறுப்பினர்களுக்கு தளர்த்தப்பட்டுள்ள விதிகள்

- L.V. Jothi Prakash
Advocate / Labour Mngt. Consultant,
Cell: 98422 64144

Source: https://www.esic.nic.in/press-release

கொரோனா – 19 பெருந்தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க, அடல் பிமிட் வியக்தி கல்யாண் யோஜ்னா திட்டத்தின் கீழ் அரசாங்கம் பெரும் தளர்வு அறிவித்துள்ளது.

இதில், அதிகபட்சமாக, 90 நாட்கள் வேலையின்மைக்கு செலுத்த வேண்டிய 25% சராசரி ஊதியத்திற்கு எதிராக இந்த திட்டம் இப்போது சராசரி ஊதியத்தில் 50% செலுத்தும். ஆகஸ்ட் 20ம் தேதி நடைபெற்ற ஊழியர்களின் மாநில காப்பீட்டுக் கழகத்தின் (இஎஸ்ஐசி) கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் சந்தோஷ் குமார் கங்வார் தலைமையில் நடைபெற்றது (ஐ/சி).

முன்பு, உரிமை கோர குறைந்தபட்ச காத்திருப்பு காலம் 90 நாட்கள் ஆகும். இது இப்போது வேலையின்மைக்குப் பிறகு 30 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. 30 நாட்கள் வேலையின்மை முடிந்த உடனேயே தொழிலாளர்கள் ஒரு மாத ஊதியத்தில் 50% கோரலாம். அவர்கள் தொடர்ந்து வேலையில்லாமல் இருந்தால், அவர்கள் மேலும் இரண்டு உரிமைகோரல்களைச் செய்ய முடியும்.

முதலாளியால் உரிமை கோரலுக்கான முந்தைய தேவைக்கு மாறாக, காப்பீடு செய்யப்பட்ட நபர் இப்போது உரிமைகோரலை நேரடியாக இஎஸ்ஐசி கிளை அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். கட்டணம் தகுதியான நபரின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

முன்னதாக மார்ச் 24 முதல் 2020 ஜூன் 30 வரை கிடைத்த கவரேஜ் காலமும், 2021 ஜூன் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. தளர்வான நிலைமைகளின் கீழ் மேம்படுத்தப்பட்ட நிவாரணம் 24.03.2020 முதல் 2020 டிசம்பர் 31 வரையிலான காலகட்டத்தில் செலுத்தப்படும். அதன்பிறகு இந்த திட்டம் 01.01.2021 முதல் 30.06.2021 வரையிலான காலகட்டத்தில் அசல் தகுதி நிலையில் கிடைக்கும். இத்தகைய நிதானமான நிபந்தனையின் தேவை மற்றும் தேவையைப் பொறுத்து 31.12.2020 க்குப் பிறகு இந்த நிபந்தனைகள் மதிப்பாய்வு செய்யப்படும். என்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தகுதி பெற காப்பீடு செய்யப்பட்ட நபர் அத்தியாவசிய நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். வேலையில்லாமல் இருப்பதற்கு முன் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு நபர் காப்பீடு செய்யப்படாமல் இருக்க வேண்டும். மற்றொரு நிபந்தனை, வேலையின்மைக்கு 78 நாட்களுக்குள் குறையாத பங்களிப்பு இருக்க வேண்டும்.

பிரிவு 2(12)-ன் கீழ், ஊழியர்களின் மாநில காப்பீட்டு சட்டம், 1948-ன் படி, 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைப் பயன்படுத்தும் பருவகாலமற்ற தொழிற்சாலைகளுக்கு பொருந்தும்.

இந்தச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புக்கான தற்போதைய ஊதிய வரம்பு மாதத்திற்கு ரூ. 21000 ஆகும். இது ஜனவரி 1, 2017 முதல் அமலுக்கு வருகிறது. இயலாமை ஏற்பட்டால் மாதத்திற்கு ரூ. 25000 அதிக ஊதிய வரம்பு அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு புதிய வேலை பெறும் ஊழியர்களின் எண்ணிக்கையும் கடந்த மூன்று மாதங்களில் அதிகரித்துள்ளது.

இது குறித்த மேலும் விபரங்களுக்கு தங்கள் அருகில் உள்ள இ.எஸ்.ஐ.சி., கிளை அலுவலகத்தை தொடர்புகொள்ளவும்.

**WEBSITE FOR SCC MEMBERS AT OFFER PRICE**

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்
உறுப்பினர்களின் தொழில் வர்த்தக வளர்ச்சிக்காக
சிறப்பு விலை ரூ. 365/- ல்
வெப்சைட் உருவாக்கித் தருகிறது.
அனைத்து தொழில் துறை சார்ந்த
அங்கத்தினர்களும் இதில் இணைந்து
தொழில் அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.
விபரங்களுக்கு: 93441 97952, 80566 56889

ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்



ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்
98430 72626
98425 72626
* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்



No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

# சல்பா இண்டஸ்ட்ரீஸ்

## வீட்டு உபயோகப் பொருட்கள்

18–ஏ, வெங்கலக்கடைத் தெரு, மதுரை – 1. போன்: 0452 4250844
63/5, விரகனூர், மகாராஜன் நகர், ராமநாதபுரம் ரோடு, மதுரை – 9.
செல்: 98945 44813

**கீழ்கண்ட வீட்டு உபயோகப் பொருட்கள்**
**மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.**



K.K.Karunakaran
Mobile : 98409 60844
82206 94087
Factory : 98945 44813

- பினாயில் காம்பவுண்ட்
- டாய்லட் கிளினர்
- சோப் ஆயில்
- வாஷிங் லிக்யூட்
- டாய்லட் கிளீனர் (ஹார்பிக்)
- தரைசுத்திகரிப்பு ஆயில் (லைசால்)
- பாத்திரம் சுத்தம் செய்யும் ஆயில் (ப்ரில்)
- ஹாண்ட் வாஷ் லிக்யூட்
- ஆசிட் சிலர்ரி
- பிளிச்சிங் பவுடர்
- வாஷிங் சோடா
- காஸ்டிக் சோடா
- டிஸ்டில்டு வாட்டர்
- வாஷிங் பவுடர் செட்
- டிடர்ஜண்ட் பவுடர்
- ஒயிட் பினாயில்
- டிஸ்வாஸ் கேக்
- டிடர்ஜண்ட் சோப்ஸ்
- ஓம வாட்டர்
- டினோ பால்
- பாத்ரூம், டாய்லட் சம்பந்தபட்ட பொருட்கள் வாசனை திரவியங்கள் மற்றும் இதர கெமிக்கல்கள்





















# முன்னேற்றப் பாதையில் தமிழகம்

**ராணுவத் தளவாடங்களுக்கு இறக்குமதிக்குத் தடை.** மத்திய அரசின் அறிவிப்பால் ராணுவத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இந்திய நிறுவனங்களை குறிப்பாக சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு வாய்ப்புகள் வளரும் என்பதில் ஐயமில்லை.

**தற்சார்பு இந்தியா** என்ற திட்டத்தின் கீழ் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் வரும் ஆண்டுகளில் 4 லட்சம் கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள் இந்திய நிறுவனங்களுடன் போடப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள். இதனால் தமிழகத்தில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக தனி டிஃபன்ஸ் காரிடர் அமைக்க, அதற்கான தனிக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. காம்போனெண்ட்ஸ் சப்ளையர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கு வாய்ப்புகள் பெருகும் என்பதில் ஐயமில்லை. இது போன்ற நடவடிக்கையினால் நம் நாட்டின் பணம் வெளிநாட்டிற்கு செல்வது தடுக்கப்படுகின்றது. டாலர் கையிருப்பும் கரையாமல் பார்த்துக்கொள்ளலாம்.

- 2019-20ல் தேசிய சராசரி வளர்ச்சி விகிதம் 4.2 சதவீதமாகவும், தமிழகத்தில் வளர்ச்சி விகிதம் 8.03 ஆக உயர்ந்துள்ளது. நமது மாநிலம் பொருளாதார ரீதியாக வளர்ச்சிப் பாதையில் உள்ளதையே காட்டுகிறது.

- 2015-2019ம் ஆண்டுகளில், நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடுகள் மற்றும் முதல்வர் அவர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் மூலம் வெளிநாட்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்படி, தங்களது உற்பத்தியை தொடங்கும்பட்சத்தில், நம் உற்பத்தி மதிப்பு இன்னும் உயரும். வேலை வாய்ப்பும், பொருளாதார நிலையும் உயரும் என்பதில் ஐயமில்லை.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர், கடந்த 2019ம் ஆண்டு நடத்திய சிட்கான் மாநாட்டில், மதுரை-அருப்புக்கோட்டை சாலையில் டிஃபன்ஸ் காரிடோரை அமைக்க, மத்திய அரசிற்கு, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட குஜராத் மாநில சட்டமன்ற உறுப்பினர் திருமதி. விபாவரி தவே மற்றும் கமலேஷ் ஜோஷிபுரா அவர்கள் மூலம் வாய்மொழி கோரிக்கையாக வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மீண்டும் சேம்பர் சார்பாக கோரிக்கை வைக்கப்படும்.

– S.S. ராம்சுந்தர்




தமிழக காங்கிரஸ் கட்சியின் தூண்களில் ஒருவர், பாராளுமன்ற உறுப்பினர், வசந்த் & கோ ஸ்தாபகர், வசந்த் டி.வி. யின் நிறுவனர், சிறந்த மேடைப்பேச்சாளர், தொழிலதிபர்களின் உந்துசக்தி முதலிய பன்முகம் கொண்ட திரு. **வசந்த குமார்** அவர்களின் இழப்பு, ஈடுசெய்ய முடியாதது. பெருந்தலைவரின் அடிமட்ட தொண்டனாக துவங்கிய அவரது அரசியல் வாழ்வு, தலைநகர் வரை அவரை அழைத்துச் சென்றதற்கு காரணம் அவரது அயராத **உழைப்பு**. ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நடத்திய சிட்கான் 2015 மாநாட்டில் கலந்து கொண்டு, வெற்றிப்படிகள் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றி, எங்களுக்கு ஊக்கமும், ஆக்கமும், ஆலோசனைகளும் வழங்கியதை நாம் என்றும் மறக்க இயலாது. தமிழகத்தின் வளர்ச்சிக்கும் தொழில் துறைகளின் மேன்மைக்கும் பாடுபட்ட இவரது மறைவு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அன்னாரின் குடும்பத்திற்கும், வசந்த் & கோ-வின் பணியாளர்களுக்கும், காங்கிரஸ் தொண்டர்களுக்கும், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.




ஒரே மாஸ்க்கை மீண்டும் பயன்படுத்தக் கூடாது






https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be

## NEXTGEN PROGRAM



இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பான NEXTGEN, **BRIDGE Industries and Education Institutions** என்ற தலைப்பிலான கூட்டத்தை கடந்த 05.09.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் Zoom Video செயலியில் ஏற்பாடு செய்திருந்தது.

இதில், சிறப்பு விருந்தினராக Dr. S. **பார்த்தசாரதி,** DHarmonic Consultant Professor, Chief Co-ordinator / Industry Institute Partnership Cell (IIPC), KLN College of Engineering, Madurai அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

## வாழ்த்துக்கள் பகுதி



ஸௌராஷ்ட்ர மகளிர் தொழில் முனைவோர் கூட்டமைப்பான - ஸௌபாக்யா அமைப்பின் 2020ம் ஆண்டின் தலைவராக திருமதி. **கே.கே. ரோஜா ராணி** அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். மகளிர்க்கான தொழில் நலத் திட்டங்களை சிறப்புடன் ஆற்றி சமூக பெண்களை ஊக்குவிக்க வேண்டி சேம்பர் கேட்டுக்கொள்கிறது.

## சேம்பர்-ன் வாழ்த்துக்குழு கூட்டம்




07.09.2020 அன்று சேம்பர்-ன் வாழ்த்துக்குழு உறுப்பினர்களின் முதலாம் ஆண்டு கூட்டம் நடைபெற்றது. இதில் சேம்பர் முன்னாள் தலைவர் திரு. S.K.R. **ரமேஷ்** அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். குழுத்தலைவர் திரு. V.V. **ராம்லக்ஷ்மண்ஜீ** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.



31.08.2020 அன்று நடைபெற்ற சேம்பர் ஆயுட்கால அங்கத்தினர் திரு. T.K. யாகேஸ்வரன் அவர்களின் இல்ல திருமண அழைப்பினை ஏற்று சேம்பர்-ன் வாழ்த்துக்குழு உறுப்பினர்கள் விழாவிற்கு கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## வாழ்த்துக்கள்



31.08.2020 அன்று நடைபெற்ற, டெல்லியில் வசிக்கும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் சிறப்பு அழைப்பாளர் திரு. **கே. எஸ். கிஷோர் குமார் - ஜெயந்தி** அவர்களின் புதல்வன் புதுமண தம்பதியர் திரு. பிரவீன் குமார் - விஷ்ணு பிரியாவிற்கு சேம்பர் சார்பாக திருமண வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.



31.08.2020 அன்று நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. R.M. ஆனந்த் பாபு, R.S.R. டிரேடர் அவர்களின் **R.S.R. ஆயில் மில்** திறப்பு விழா அழைப்பினை ஏற்று சேம்பர்-ன் வாழ்த்துக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.





Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்




Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in



# மதுரை

### காலங்களை வென்ற கூடல்நகர்

# இரண்டாம் தலைநகர்

## தேவை, தேர்வு & திட்ட முன்வரைவு

### சிறப்பு அலசல்




**S.R. நாகேஸ்வரன்**

*முன்னாள் நிர்வாக இயக்குனர்*

*இட்கோட் ஆலோசனை நிறுவனம்*


தமிழகத்துக்கு இரண்டாம் தலைநகர் தேவை என்ற அழுத்தமான கோரிக்கைகள் வந்தபோதும் தற்போது அரசு கொள்கை முடிவு ஏதும் எடுக்கவில்லை என முதல்வர் தெரிவித்துள்ளார். கொள்கை முடிவு எடுப்பதன் தேவை மற்றும் நோக்கங்கள், நகர ஒப்பீடுகள் ஆகியவற்றை அரசுக்கு பரிந்துரைப்பது இந்த கட்டுரையின் நோக்கம். எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க முடிவு செய்ததும், இதே மண்டலங்கள் சார்ந்த மதுரை, தஞ்சாவூர் பெருந்துறை ஆகியவை ஒப்பீடு செய்யப்பட்டு கால இடைவெளிக்குப்பின் மதுரை சமீபத்தில் தேர்வானது. தலைநகர் விவகாரத்தில் 5 கேள்விகளுக்கான விடைகள் அம்முடிவை துரிதப்படுத்தும்.

1. இரண்டாம் தலைநகர் கட்டாயம் தேவையா? அதற்கான உரிய தருணமா?
2. பொருத்தமான நகரங்கள் மற்றும் ஒப்பீட்டுக்கான ஆதாரப்பூர்வ அளவீடுகள்,
3. நகரங்களின் ஒப்பீடு,
4. மதிப்பீடும் நகர தேர்வும்,
5. விரிவாக்க தலைநகர் திட்டநோக்கங்களின் முன்வரைவு.

தமிழகத்தில் சென்னைதான் தலைநகர் என்பதையும் அதை மாற்ற தேவையில்லை என்பதும் அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சில மாநிலங்களை போல் பருவகால தலைநகர் அல்லது நிர்வாக தலைநகர் அல்லது ஆந்திராவில் புதிதாக நிர்மாணிக்கப்படும் ஆட்சிப் பகிர்வு தலைநகரங்கள் என்ற கோரிக்கை இங்கு எழவில்லை. சென்னை மற்றும் அதன் 3 சுற்று மாவட்டங்கள் (திருவள்ளூர், காஞ்சிபுரம் & செங்கல்பட்டு) அடங்கிய சென்னை காலங்களில் மட்டுப்படுத்துவது மற்றும் துரித வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள மண்டலங்களுக்கு பகிர்ந்துளிப்பது, அதிலும் தொலைதூர தென் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிப்பது என்ற இரு உயரிய நோக்கங்கள் வலியுறுத்தப்படுகின்றன. இந்த விரிவாக்கத் தலைநகர் என்ற கோரிக்கை முதலீட்டு வீண் விரயம், இடமாற்ற விரயங்கள் முடிந்தவரை தவிர்க்கப்பட்டு மிகவும் துரிதமாகவும் செம்மையாகவும் செயல்படுத்தக் கூடியதாக விளங்குகிறது.

**1. தேவையும் அவசரமும்:** தமிழகம் அதிவேக பொருளாதார வளர்ச்சி காண்பதில் சென்னை உலகளாவிய முதலீட்டு ஈர்ப்பு மையமாக விளங்குவது கண்கூடு. இந்த ஆண்டின் மாநில ஜி.டி.பி ரூபாய் 19.20 லட்சம் கோடி என நிதிநிலை அறிக்கை தெரிவித்துள்ளது. அரசின் புள்ளிவிபர கையேடு 2018 மாவட்ட வாரியான ஜிடிபி விவரங்களை 2013-14 ஆண்டுவரை தருகிறது.

**தமிழக ஜிடிபியில் சென்னை பகுதியன் சதவீதம்**

| ஆண்டு | தமிழகம் ரூ.லட்சம் & கோடியில் | சென்னை பகுதி ரூ. லட்சம் & கோடியில் | சென்னை பகுதியின் சதவீதம் |
|---|---|---|---|
| 2006-07 | 2.76 | 0.53 | 19.00% |
| 2010-11 | 5.28 | 1.03 | 19.40% |
| 2013-14 | 8.60 | 2.10 | 24.30% |
| 2019-20 | 19.20 | இதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளின் தரவு விகிதப்படி சென்னை பகுதியில் 30% - 34% வரை கணிக்கலாம் | |

தமிழ்நாட்டு முதலீடுகளில் அரசுத்துறை 52% பங்கு, தனியார் துறை 30%, பன்னாட்டு முதலீடுகள் 15% எனவும் கணிக்கப்படுகிறது. பன்னாட்டு முதலீடுகள் சென்னை பகுதியிலே குவிவது, அப்பகுதியே பெருமளவு தனியார் முதலீடுகளை ஈர்ப்பது, அதனை ஊக்குவிக்க மற்றும் தக்கவைக்க அரசு அதிக அளவில் சாலை, துறைமுகம், நகரமைப்பு, தொழில் பூங்கா என கட்டமைப்பு பணிகளில் அதிகம் முதலீடு செய்வது இதற்கு முக்கிய காரணம். இது பிற துறைகளான ஹோட்டல், டூரிசம், வாகனங்கள், மால், மல்டிபிளக்ஸ், ரியல் எஸ்டேட், உணவகங்கள், டெலிவரி சர்வீஸ், கல்வி, மருத்துவம் என வளர்ச்சி பல்கிப்பெருகி பொங்கிட வழி செய்கிறது. இது நகரமயமாக்கல் சார்ந்த மக்கள் தொகை நெருக்கம், போக்குவரத்து நெரிசல், சுற்றுச்சூழல் மாசு என நெருக்கடிகளை அதிகப்படுத்துகிறது.

சீனா உலக நாடுகளின் நம்பிக்கையில் வீழ்ச்சி கண்டுள்ளது. எனவே இந்தியா உலகளாவிய சப்ளை செயின் உற்பத்தி தொடரில் அதி முக்கியத்துவம் பெறுகிறது. இது தமிழகத்துக்கும் குறிப்பாக சென்னை பகுதிக்கு மேலும் அதிவேக வளர்ச்சிக்கான




வாய்ப்பாகும். அதேபோல் சமீபத்தில் ஆப்பிள் போன்களுக்கான தயாரிப்பு சீனாவிலிருந்து சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது போல மேன்மேலும் சென்னையில் முதலீடுகள் குவிய வாய்ப்பு அதிகம். இந்திய அரசின் **ஆத்ம நிர்பார்** என்ற சுயசார்பு இந்தியா திட்டமும் இதனை துரிதப்படுத்தும். தமிழக அரசின் சீரிய முயற்சியால் இந்த கொரோனா பேரிடர் காலத்திலும் ரூபாய் 30,500 கோடிக்கான முதலீடுகளை ஈர்த்து முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

இந்த வளர்ச்சியினால் வரும் 20 ஆண்டுகளில் சென்னை பகுதியான ஜிடிபி பங்கு 50% என உயர அதிக வாய்ப்புள்ளது. இது மண்டல ஏற்றத்தாழ்வு சார்ந்த முரண்களை, குறிப்பாக வாய்ப்பு குறைவாக உள்ள தென் மண்டலங்களில், சிக்கலான மற்றும் சவாலான சூழ்நிலைகளை உருவாக்க இடமளிக்கிறது. அதேபோல் சென்னை பகுதியில் நெருக்கடிகள் பன்மடங்கு பெருகி சமாளிப்பது கடினமாகலாம். இத்தகைய சூழ்நிலை அனுபவத்தை சர்வதேச அரங்கில் இருந்து கற்றுக்கொள்தற்கு தமிழகத்தை தென் கொரியாவுடன் ஒப்பீடு செய்யலாம்.

சியோல் நகரமும் சென்னை போல் அந்நாட்டின் வடகோட்டில் அமைந்திருந்தாலும் சீனாவின் தலைநகரான பெய்ஜிங் மாற்று ஈர்ப்பு சக்தியாக விளங்குவதால், தலைநகர நெருக்கடிகளை குறைப்பது மட்டுமே நோக்கம் என்று ஆகி, மண்டல பரவலை கைவிட்டு, 125 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேஜாங் நகரை நிர்வாக தலைநகராக்கி சியோல் பகுதியின் பொருளாதார குவிப்பை பரவலாக்கும் முடிவு 2002ம் ஆண்டில் கொள்கை முடிவடுத்து அதை நிறைவேற்றி வருகிறது.

**தமிழகம் & தென்கொரியா - ஒப்பீடு**

| விவரம் | அளவீடு | தமிழ்நாடு | தென் கொரியா |
|---|---|---|---|
| நிலப்பரப்பு | சதுர கிலோமீட்டர் | 1,30,058 | 97,230 |
| மக்கள் தொகை | லட்சம் | 770 | 513 |
| மக்கள் நெருக்கம் | ஒரு சதுர கி.மீ-க்கு | 555 | 527 |
| **தலைநகரம்** | | **சென்னை** | **சியோல்** |
| தலைநகரில் மக்கள் நெருக்கம் | ஒரு சதுர கி.மீ-க்கு | 26550 | 16000 |
| தலைநகர ஜிடிபி பங்கு | 19.20 | 30-34% | 50% |
| **இரண்டாம் தலைநகர்** | | | **சேஜாங்** |

அதாவது, கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிடல் தொடங்கியது கவனிக்கத்தக்கது.

தமிழகத்தின் சென்னை பகுதியில் தற்போதைய நிலை இன்னும் 20 ஆண்டுகளில் உருவாகவிருக்கும் நெருக்கடிகள், அதை சார்ந்த சர்வதேச அளவிலான அனுபவங்கள் ஆகியவற்றில் இருந்து தமிழகத்துக்கு இரண்டாம் தலைநகர், அதாவது விரிவாக்க தலைநகர் மிக அவசியமானது என்றும், அதுபற்றிய கொள்கை முடிவு எடுக்க இதுவே மிக சரியான தருணம் எனவும் புலனாகிறது.

**2. நகரங்கள் மற்றும் ஒப்பீடுக்கான ஆதாரப்பூர்வு அளவீடுகள்:** திட்டத்தின் நோக்கம் வளர்ச்சி பரவலாக்கம் என்பதாலும், புதிய நகரை நிர்மாணிப்பது அல்லது தலைநகரை மாற்றுவது அல்ல என்பதாலும், வெவ்வேறு மண்டலங்களில் உள்ள வளர்ந்த பெருநகரங்கள் பொருத்தமானதாக இருக்கும். சென்னைக்கு அடுத்த மக்கள் தொகை, மண்டல தொழில் வியாபார மையங்கள் மற்றும் சர்வதேச விமான நிலையங்கள் அமைந்த கோவை, மதுரை, திருச்சி ஆகிய மூன்று நகரங்கள் தேர்வுக்குரிய நகரங்கள்.

இவற்றின் ஒப்பீடு அதிகாரப்பூர்வமான அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரங்களை அடிப்படையாக கொண்ட சர்வதேச அளவீடுகள் அடிப்படையில் செய்வது பொருத்தமானதாக இருக்கும். மாவட்ட வாரியான அடிப்படை விவரங்களுக்கு தமிழக அரசின் புள்ளியியல் விபரம் 2018 கையேடு ஆதாரமானதாகும். உலக வங்கி 2016ம் ஆண்டில் இந்தியாவின் 519 மாவட்டங்களை, பொருளாதார வளர்ச்சிக்கான குறியீடுகளால் தர வரிசை படுத்தி வெளியிட்டுள்ளது. (World Bank - Identifying Potential of Indian Districts - WPS 7623 - April 2016). நகரமயமாக்கம், மனிதவள ஆற்றல், சந்தை வசதி, உள்ளூர் தொடர்பு வசதி, பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகள் என்ற ஐந்தும் இவை தவிர ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான பொருளாதார திறன் ஆகியவையே உலக வங்கி வகைப்படுத்திய அளவீடுகள் ஆகும்.



உலகலாவிய நகரங்களின் (243 நகரங்கள்) போக்குவரத்து நெரிசல் குறியீடு மற்றும் சுற்றுச்சூழல்

மாசு குறியீடு (335 நகரங்கள்) இரண்டையும் நம்பியோ.காம் (numbeo.com) என்ற நிறுவனம் பல்லாண்டுகளாக வெளியிட்டு வருகிறது. அதன் 2020 பதிப்பு இணையத்தில் உள்ளது. தென்கொரிய நாட்டின ஜி.டி.பி-யின் சியோல் நகரின் பங்கு என்ன என்பதை OECD வெளியிட்டுள்ளது.

**3. ஒப்பீடு:** நிகழ்கால நெருக்கடிகள் குறைவானதாகவும், வருங்கால வளர்ச்சித் திறன் அதிகமானதாகவும் பழங்கால வரலாற்று சிறப்புகள், தொன்மை மற்றும் பன்முகத்தன்மை கொண்டதாகவும் இருப்பது மிக சிறப்பு.

**விரிவாக்க தலைநகர் - நகர ஒப்பீடு**

| | அளவீடு | சென்னை | கோவை | மதுரை | திருச்சி |
|---|---|---|---|---|---|
| | **1. நிகழ்கால நெருக்கடிகள் -** | | | | |
| 1 | மக்கள் தொகை நெருக்கம் (Per Sq Km) | 26553 | 731 | 819 | 604 |
| 2 | நகரமயமாக்கம் (இந்தியாவில் மாவட்ட தரவரிசை -உலக வங்கி) | 1 | 20 | 40 | 70 |
| 3 | தென்கோடிக்கானதூரம் -KM | 715 | 450 | 245 | 377 |
| 4 | போக்குவரத்து நெரிசல் குறியீடு 2020 (உலகலாவிய 243 நகர நெரிசல் குறியீடு ) | 206.95 | 202.14 | பட்டியலில் இடம் பெறவில்லை | |
| 5 | சுற்றுச்சூழல் மாசு குறியீடு (உலகலாவிய 335 நகர நெரிசல் குறியீடு -2020) | 75.27 | 62.11 | பட்டியலில் இடம் பெறவில்லை | 50.30 |
| | நிகழ்கால பொருளாதாரகுவிப்பு காரணிகள் | | | | |
| 6 | மாநில ஜிடிபியில் பங்கு | 24.3% (சென்னை பகுதி) | 6.02% | 3.77% | 4.64% |
| 7 | அரசு சார் முதலீடு | மிக அதிகம் | நடுத்தரம் 1 | நடுத்தரம் -2 | அதிகம் |
| | திருச்சியில்BHEL, Ordinace Factory, Heavey Alloys Penetrator Project, Golden Rock Railway Workshop, NIT, IIM. மதுரையில் உயர்நீதிமன்ற கிளை உள்ளது. எய்ம்ஸ் மருத்துவமனை இனி அமைய உள்ளது. கோவையில் பாதுகாப்புத் துறைடிபன்ஸ் காரிடார் அமைக்கப்பட்டு வருகிறது. | | | | |
| 8 | தனியார் துறை முதலீடு | மிக அதிகம் | அதிகம் | நடுத்தரம் | |
| 9 | பன்னாட்டு முதலீடு | அதீதம் | நடுத்தரம் | மிகக் குறைவு | |
| | **2.வருங்கால வளர்ச்சி திறன்** குறியீடுகள் -( உலக வங்கிஆய்வறிக்கை 2016 மாவட்ட தரவரிசை ) | | | | |
| 10 | மனிதவள ஆற்றல் | 19 | 311 | 91 | 97 |
| 11 | சந்தை வசதி ( Market Access ) | 27 | 30 | 39 | 68 |
| 12 | உள்ளூர் தொடர்பு ( Local Connectivity ) | 6 | 135 | 125 | 151 |
| 13 | பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகள் (Economic Density ) | 2 | 38 | 42 | 57 |
| 14 | வளர்ச்சிக்கான பொருளாதார திறன் (Economic growth potential index) | மிக அதிகம் | மிக அதிகம் | மிக அதிகம் | அதிகம் |
| | **3. பழங்காலம்** -வரலாற்று பெருமைகள் | | | | |
| | தொன்மை பண்பாடு கலை தொல்லியல் முக்கியத்துவம் | 380 ஆண்டுகளுக்கு மேலாக உலகத்தில் மிக முக்கிய நகர் | சேரநாட்டில் கொங்கு பகுதியில் முக்கிய கேந்திரம் | தொன்மைவாய்ந்த காலங்கள் தோறும் தலைநகராக விளங்கிய நகரம் | சோழநாட்டில் நதிக்கரை நாகரீகம் தழைத்தோங்கிய நகரம் |

மதுரை பழங்காலந்தொட்டே, பாண்டியர்கள் காலம் முதல் நாயக்கர்கள் காலம் வரை தலைநகராகவும், இறையனார் தமிழ் சங்கம் அமைத்த இடமாகவும், வைகை நதிக்கரை நாகரீகம், தொல்லியல் தொன்மை வாய்ந்த கீழடி நகர நாகரீகம், தொன்மை வாய்ந்த வாணிபக் கேந்திரம், திருக்குறள் அரங்கேற்றப்பட்ட இடம், சிலப்பதிகாரம் என இலக்கியங்களில், இயல், இசை, நாட்டியம் என அனைத்து துறைகளிலும், சிற்பக்கலைக்கு உலகுக்கே தலைமை பீடமாக உள்ள மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் உள்ள நகரமாகவும் முதன்மை பெற்று விளங்குகிறது. திருச்சி தொன்மை வாய்ந்த சோழர்கால நகராகவும் உறையூர் முன்பொரு காலத்தில் தலைநகராகவும் இருந்திருக்கிறது. மிகப்பழமை வாய்ந்த மலைக்கோட்டை, புராணங்களில் சொல்லப்படும் திருவரங்கம் கோவில் மற்றும் பெருமை வாய்ந்த காவிரி நதிக்கரை நாகரிகம் அமைந்த இடம். கோவை சங்க காலம் தொட்டு பின் சேரர்களின் ஆளுமைக்கு உட்பட்ட கொங்கு பகுதியில் முக்கியமான கேந்திரமாக விளங்குகிறது.

**4. மதிப்பீடும் தேர்வும்:** மூன்று நகரங்களை ஒப்பீடு செய்வதால் முதல் நிலைக்கு மூன்று புள்ளிகளும் (பச்சை) இரண்டாம் நிலைக்கு (மஞ்சள்) இரண்டு புள்ளிகளும் மூன்றாம் நிலைக்கு (ஆரஞ்சு) ஒரு புள்ளியும் சமநிலையில் இருந்தால் அதே புள்ளிகளும் தருவது சமமான வாய்ப்பு மற்றும் பொருத்தமானதாக இருக்கும்.

**தமிழகம் & தென்கொரியா - ஒப்பீடு**

| கால வரையறை | மொத்த புள்ளிகள் | கோவை | மதுரை | திருச்சி | முதலிடம் |
|---|---|---|---|---|---|
| நிகழ்கால நெருக்கடிகள் (9) | 27 | 11 | 24 | 22 | மதுரை |
| வருங்கால வளர்ச்சி திறன் (5) | 15 | 12 | 13 | 06 | மதுரை |
| பழங்காலம் வரலாற்று பெருமைகள் (1) | 03 | 01 | 03 | 02 | மதுரை |
| சம மதிப்பீட்டு முறை | 45 | 24 | 40 | 30 | மதுரை |
| சமன் படுத்தப்பட்ட மதிப்பீடு | 100 | 60.30 | 87.73 | 60.07 | மதுரை |

சம மதிப்பீட்டு முறையில், அதிகபட்சம் 45 புள்ளிகளில், மதுரை நிகழ்கால, வருங்கால மற்றும் தொன்மைக்கால குறியீடுகளில் முதன்மையாகவும், மொத்த மதிப்பீட்டில் 40 புள்ளிகளுடன் முதல் நிலையில் விளங்குகிறது. திருச்சி 30 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், கோவை 24 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் வருகின்றன.

சமன் படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறையில், நிகழ்கால நெருக்கடிகளுக்கு 27 புள்ளிகளுக்கும் சேர்த்து 50 விழுக்காடும் வருங்கால வளர்ச்சிக்கான 15 புள்ளிகளுக்கு 50 விழுக்காடு என நிகழ்கால குறியீடு மற்றும் வருங்கால குறியீடுகளுக்கு சமமானபகிர்வு அளிக்கப்பட்டால், மொத்தம் 100 புள்ளிகளில், மதுரை 87.73 புள்ளிகளுடன் முதலிடத்திலும் திருச்சி 60.70 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும் 60.30 புள்ளிகளுடன்


Sowndarya Traders

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com


சூட்டமாக இருக்கும் இடங்களை தவிர்க்கவும்

கோவை மூன்றாம் இடத்திலும் வருகின்றன.

எனவே காலங்களைக் கடந்து முதல் இடத்தில் இருக்கும் மதுரை நகரே இரண்டாம் தலைநகரான விரிவாக்க தலைநகருக்கு மிக பொருத்தமான தேர்வாக இருக்கும்.

**5. மதுரை - விரிவாக்க தலைநகரின் திட்ட முன்வரைவு:**

- வரும் காலங்களில் அரசின் முதலீடுகளில் மண்டல பகிர்வில் கூடுதல் கவனம் செலுத்துதல்.
- அரசுத்துறை மற்றும் திட்ட முதலீடுகளில் மதுரை மற்றும் தென் மாவட்டங்களுக்கு கூடுதல் முன்னுரிமை வழங்குதல்.
- மதுரை மற்றும் தென் மாவட்டங்கள் மிக சிறப்புற்று விளங்கும் வாழ்வியல் சார்ந்த அரசு துறைகள், குறிப்பாக தமிழ் வளர்ச்சி & பண்பாடு, தொல்லியல், சுற்றுலா, விளையாட்டு, இளைஞர் நலம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஜவுளி & கைத்தறி, அறநிலையத்துறை ஆகியவற்றை மதுரையில் தலைமை இடமாகவும் அல்லது ஆணையரகம் அமைத்து முக்கிய கேந்திரியமாக ஆக்குவது. உதாரணமாக, இந்தியாவின் தலைநகர் & நிதியமைச்சகம் டெல்லியில் இருந்தாலும், ரிசர்வு வங்கி மற்றும் எஸ்.பி.ஐ தலைமை அலுவலகங்கள் மும்பை நகரத்திலேயே இருக்கின்றன.
- தொழில் ஊக்குவிப்பு கொள்கைகளில் தனியார் முதலீட்டை தென்மாவட்டங்களுக்கு ஈர்ப்பதில் இலக்கு வைத்து செயல்படுத்துவது.
- அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் தென்மாவட்டங்களுக்கு என கொள்கை வகுப்பது; குறிப்பாக மதுரை தூத்துக்குடி பொருளாதார மண்டலம் அமைத்து ஊக்கம் அளிப்பது.
- மருத்துவ துறையில் மெடிக்கல் டூரிசம் என்பதற்கான இரண்டாம் கேந்திரமாக மதுரையை நிலை நிறுத்துவது; இது விமான சேவை, ஹோட்டல், வாகன போக்குவரத்து, உணவகங்கள் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவை பெரிதும் மேம்பட உதவும்.
- மனிதவள ஆற்றல் அதிகம் உள்ளதால் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை அதிக அளவு மதுரை சார் பகுதிகளுக்கு ஈர்ப்பது. இந்தியாவின் உலகத்தர வரிசையில் உள்ள ஆறு ஐடி நிறுவனங்களில், டிசிஎஸ், இன்ஃபோசிஸ், விப்ரோ, காக்னிசன்ட் தவிர ஹெச்சிஎல் (சிவ நாடார்) சோஹோ (ZOHO ஸ்ரீதர் வேம்பு) ஆகிய இரண்டும் தென் மாவட்டங்களை சார்ந்தவர்களால் துவக்கப்பட்டவை என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

**இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு. - குறள் 385**

பொருள்: காத்தல், வகுத்தல், வளர்ச்சியை பரவலாக்குதல் மற்றும் கடைக்கோடி பகுதிக்கும் சென்று சேர்த்தல் என்பதால் அரசின் தலையாய கடமை ஆகிறது.

தமிழகத்தின் சூழ்நிலைக்கு, விரிவாக்க தலைநகர் முன்கூட்டியே திட்டமிடல் அளவுகோலால், மிகவும் அவசியமான தேவை என்றும், அதற்கு இதுவே உகந்த தருணம் என்பதும், மதுரையே சாலப் பொருத்தமான தேர்வாக இருக்கும் என்பதும் தெள்ளத் தெளிவாகிறது. இந்த முடிவு பொருளாதார பரவலில் புதிய பரிமானங்களை ஏற்படுத்தி உலகுக்கு ஒரு முன்னோடியாக விளங்கி தமிழகம் முதன்மை மாநிலமாக தொடர்ந்து நிலைநிறுத்த வல்லது என்ற நிறைந்த நம்பிக்கை ஏற்படுகிறது. காலத்தே முடிவெடுப்பதில் சிறந்து விளங்கும் தமிழக அரசு இதிலும் மிக விரைந்து நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

முகக்கவசம் அணிவீர்... சமூக இடைவெளியை பின்பற்றவும்...


18ஆம் ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 171711500001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337


சிறந்த தையல் ! குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !! ஒரே விலையில் !!
ரேவதீஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223




# GSTR-2B துவக்கம் Goods and Services Tax

பொருள்கள் மற்றும் சேவை வரி கவுன்சில் மார்ச் 14, 2020 அன்று நடைபெற்ற 39வது கூட்டத்தில், ஜி.எஸ்.டி.ஆர் -3பி GSTR-3B மற்றும் GSTR-1 ஆகியவற்றைத் தாக்கல் செய்யும் தற்போதைய முறையை இணைக்கும் அணுகுமுறையையும், GSTR-2A-ன் மேம்பாடுகள் மற்றும் GSTR-3B உடன் இணைத்தல் போன்ற பிற குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பின்பற்றவும், செயல்படுத்தவும் பரிந்துரைத்தது.

கவுன்சில் பரிந்துரைத்த அத்தகைய ஒரு மேம்பாடு, ஒவ்வொரு வரி செலுத்துவோருக்கும் கிடைக்கக்கூடிய உள்ளீட்டு வரிக்கடனை உதவ / தீர்மானிக்க உதவுவதுடன், தானாக தயாரிக்கப்பட்ட உள்ளீட்டு வரிக்கடன் (ITC) அறிக்கையை அறிமுகப்படுத்துவதாகும். GSTR-2B அத்தகைய தானாக தாயாரிக்கப்பட்ட உள்ளீட்டு வரிக்கடன் (ITC) அறிக்கையாக இருக்கப் போகிறது.

இது பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் அந்தந்த நபரின் சப்ளையர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் உருவாக்கப்படும். GSTR-1, 5 (குடியுரிமை பெறாத வரிவிதிக்கும் நபர்) மற்றும் 6 (உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர்). இது ஒரு நிலையான அறிக்கை மற்றும் ஒவ்வொரு மாதமும், அடுத்த மாதத்தின் 12ம் நாள் கிடைக்கும்.

இது GSTR-2B வருவாயைத் தயாரிப்பதற்கு எடுக்கும் நேரத்தைக் குறைக்கவும், பிழைகளைக் குறைக்கவும், நல்லிணக்கத்திற்கு உதவவும் மற்றும் வருமானத்தைத் தாக்கல் செய்வது தொடர்பான இணக்கத்தை எளிதாக்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**GSTR-2B முக்கிய அம்சங்களில் வரி செலுத்துவோருக்கு திருப்பித் தாக்கல் செய்ய உதவும்:**

- சிறப்பு பொருளாதார மண்டல அலகுகள் / டெவலப்பர்களிடமிருந்து பெற்றப்பட்ட பொருட்களின் உள் பொருட்கள் உட்பட ICEGATE அமைப்பிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வது பற்றி தகவல்கள் இதில் உள்ளன. ஜூலை மாதத்திற்கான GSTR-2B வெளியீட்டில் இது கிடைக்கவில்லை. விரைவில் இது கிடைக்கும்.
- ஒவ்வொரு பிரிவின் கீழும் கிடைக்கக்கூடிய மற்றும் கிடைக்காத அனைத்து ITC-யையும் காட்டும் சுருக்க அறிக்கை, ஒவ்வொரு பிரிவிற்கும் எதிராக வழங்கப்படும் ஆலோசனை, வரி செலுத்துவோர் அந்தந்த பிரிவில் GSTR-3B -ல் எடுக்க வேண்டிய நடவடிக்கையை தெளிவுபடுத்துகிறது.
- அனைத்து விலைப்பட்டியல், கடன் குறிப்புகள், பற்று குறிப்புகள் போன்றவற்றின் ஆவண நிலை விவரங்களும் பார்ப்பதற்கும், பதிவிறக்கம் செய்வதற்கும் வழங்கப்படுகின்றன.

- PIB News

## நோட்டீஸ் வந்தால் நேரில் வரவேண்டாம்

-- வரித்துறை தகவல்

வருமான வரித் துறையிடம் இருந்து நோட்டீஸ் வந்தால் பெரும்பாலானோர் பதற்றமாகி விடுகின்றனர். அப்படி நோட்டீஸ் வந்தால் பதற்றம் அடைய தேவையில்லை. அதேபோல் உடனே அருகில் உள்ள வருமான வரித்துறை அதிகாரிகளை நேரில் சந்தித்து விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. இணையதளம் மூலம் உங்களுடைய நோட்டீசுக்கான விளக்கத்தை வழங்கலாம் என வருமான வரித்துறை கூறியுள்ளது.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிமுகப்படுத்தியபடி இணையதளம் மூலமாக வருமான வரிக் கணக்கை மதிப்பீடு செய்யும் நடைமுறை கடந்த அக்டோபரில் அமல்படுத்தப்பட்டது. இந்த நடைமுறையின் மூலம் வருமான வரிக் கணக்கு தொடர்பாக இதுவரை 58,319 வழக்குகளை விசாரிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் இதுவரை 7,116 வழக்குகள் இணையதளம் மூலமாகவே தீர்வு காணப்பட்டுள்ளது.

- தி இந்து (த)


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

Cell: 90805 54802, 99424 90217



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com


அனைவரும் பயன்படுத்தக்கூடிய கதவின் கைப்பிடி, தொலைபேசி போன்ற பொருட்களை கிருமி நாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.



# மிகச்சிறந்த செல்வங்கள்

– B.S. ஜெனார்த்தனன்

திருமண விழாவில் மணமக்களை பெரியோர்கள் வாழ்த்தும் போது பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என ஆசிர்வதிப்பார்கள். அத்தகைய பதினாறு செல்வங்களான கல்வி, புகழ், வலிமை, வெற்றி, நன் மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் ஆகியவை ஆகும்.

இத்தகைய செல்வத்தைத் தான் அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியில் அன்னையிடம் கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்... என்று 16 வகைச் செல்வங்களை வேண்டியுள்ளார்.

பதினாறு வகை செல்வங்களும் முக்கியமானவையே, அதில் அதிமுக்கியமாகக் கருதப்படுபவை நன்மக்களைத் தான். பெற்றெடுத்த பிள்ளைகள் நன்மக்களாக வளர்க்க பெற்றோர் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் வார்த்தைகளால் அலங்கரிக்க முடியாது. நம்மைப் பெற்றதனால் அவர்கள் பெற்றோர்கள், அவர்களைப் பேறு பெற்றவர்களாக இந்த உலகில் தலைநிமிரச் செய்வது தான் பிள்ளைகளின் கடமை.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வரிசைப்படுத்தியதும் தாய் தான் முதலில் வருகிறாள். பெற்றெடுத்த தாய், தந்தையர் தான் முதல் இரண்டு இடத்தில் உள்ளனர். அதன் பிறகு தான் கற்றுக்கொடுத்த குருவும், தெய்வமும். தாய், தந்தைக்கு நிகர் அவர்களே என்று பல சான்றோர்களும் முனிவர்களும், ஞானிகளும் அறுதியிட்டு கூறியுள்ளனர்.

தாய் தந்தையரில் தாய்க்கு தான் முதலிடம். திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்ற அற்புதமான திருவாசகத்தை இந்த உலகிற்கு அருளிய மாணிக்கவாசகர் அம்மை நீ, அப்பனும் நீ என்று இறைவனை நினைத்து உருகிப் பாடும் போது கூட தாயைத் தான் முன்னிறுத்தி பாடியுள்ளார். அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம் என்று அன்னையையே முதலில் கூறி பிறகு தான் தந்தையைக் கூறியுள்ளார் ஔவைப் பிராட்டி. ஒரு குழந்தைப் பிறந்து இந்த உலகிற்கு வந்தவுடன் அந்த தாய் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அதை விட மிகச் சிறந்த மகிழ்ச்சி.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் – குறள்: 69

தான் பெற்றெடுத்த மகனை நற்பண்பு நிறைந்தவன் என பிறர் சொல்லக் கேட்கும் போது தான் அவனை பெற்றக் காலத்தில் அடைந்த மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள். அனைத்துச் செல்வத்தைத் துறந்த பட்டினத்தடிகள் தாயைத் துறக்க அவரால் முடியவே இல்லை. பட்டினத்தடிகள் துறவியாக ஊர் ஊராகத் திரிந்து கொண்டிருந்த காலத்தில் அவருடைய அன்னையார் மரணச் செய்தி கேட்டு, சுடுகாட்டினை அடைந்த அவர், தாயின் சிதைக்காக உறவினர்கள் அடுக்கியிருந்த காய்ந்த விறகுகளை அகற்றிவிட்டு பச்சை வாழைமட்டைகளையும் இலைகளையும் கொண்டு சிதை அடுக்கி

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பிரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

என்ற அவரது சொற்கள், முற்றும் துறந்தும், தாயைத் துறவாத அம்முனிவரின் மன நெகிழ்ச்சியை நமக்கு தாயின் பெருமையை நன்கு அறிவிக்கின்றன. பிள்ளைகளையும், காதலுக்காக பெண்களை வர்ணித்து பாடல்களை எழுதிய கவிஞர்கள் தாய்க்காக பல பாடல்களை எழுதினார்கள், ஆனால் ஏனோ தந்தைக்கு ஒரு சில பாடல்களே... அதுவும் தற்போது





PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in

P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI



தான் தந்தையின் அருமை பெருமைகளை வெளி உலகிற்கு விளக்கி வருகின்றனர் தற்போதையப் படைப்பாளிகள். தந்தையின் கடமையையும், மகனின் கடமையையும் அப்போதே விளக்கியுள்ளார் திருவள்ளுவர்.

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். - குறள்: 67

ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யும் நல்ல உதவி, அவனைக் கற்றோர் அவையிலே முதன்மை பெற்றவனாக இருக்கச் செய்தலே ஆகும்.

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் - குறள்: 70

மகன், தந்தைக்குச் செய்யும் உதவி இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்னும் புகழ்ச்சொல்லே ஆகும். இன்றைய குடும்ப சூழல், உலக நடப்பில் தாயோ, தந்தையோ தங்களது பிள்ளைகளுக்காக கடமைகளைச் செய்யத் தவறியதாக அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் கேள்விப்படுகிறோம். ஆனால் பிள்ளைகள் தங்கள் கடமைகளை மறந்து இருப்பதை முதியோர் இல்லங்கள் காட்டிக்கொடுத்துவிடுகிறது. கரு உருவானது முதல் தன் வயிற்றில் வளரும் போதும் பிறந்த பிறகு பிள்ளைக்கு எது நல்லது என அறிந்து தெளிந்து அது தனக்கு பிடிக்குமோ, பிடிக்காதோ தன் பிள்ளையின் நலனுக்காக தான் செய்தே ஆக வேண்டும் என்ற தியாக உள்ளத்திற்கு ஈடுஇணை இந்த உலகத்தில் எதுவுமில்லை.

குழந்தை பிறந்தது முதல் அவனை நல்லவனாக, வல்லவனாக, கல்வியிலே சிறந்தவனாக, செய்யும் தொழிலே தேர்ந்தவனாக, தான் இருக்கும் வரை தன்னைவிடச் சிறந்தவனாக வளர்க்க அரும்பாடு படும் தந்தை தாய்க்கு சற்றும் குறைந்தவர் அல்ல.

அனைத்திற்கும் மேலாக சூழ்நிலைக்காரணமாக பெண்ணை மறுமணம் செய்யும் போது அப்பெண் பெற்றக் குழந்தையை தனது குழந்தையாகப் பாவித்து வளர்க்கும் தந்தைக்கு ஈடாக யாரையும் ஒப்பிட முடியாது. ஒருவன் தன் தாயைப் போல பலரை அடையாளம் காண முடியும்.

ஆனால் தன் தந்தையைப் போல் வேறு எவரையும் அடையாளம் காண முடியாது. தந்தையின் பெருமையை எழுத்தால் வர்ணிக்க முடியாது என்பதால் தானோ என்னவோ படைப்பாளிகள் தந்தையின் பெருமையை எழுத்தால் படைக்கவில்லை என்று தோன்றுகிறது.

தாயிற் சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை.

என்ற வார்த்தைகளுக்கேற்ப தாய், தந்தையை பேணுவோம். இருக்கும் போதும், இறப்பிற்கு பின்பும் அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைக் கண்ணும் கருத்துமாக செய்து வாழ்வின் மிகச்சிறந்த செல்வங்களை அவர்களின் ஆசியால் மகிழ்வோடும், நிறைவோடும் பெற்று வாழ்வாங்கு வாழ்வோம்.

## Personal Financial Matters After COVID - 19 - A Survey Report

Out of 1400 respondents, (17% Women, 83% Men)

**Awareness on making expenses**
- 50% of them plan to reduce discretionary spending and have more for an emergency.
- 28% cut their non essentials,
- 22% build a financial corpus to dip into during an emergency and
- 10% wants to reduce EMI option.

**Financial actions to save more:**
- 23% respondents say they will build a financial corpus for an emergency.
- 18% for Retirement
- 10% for Children's education and buying a house.
- 70% don't know the concept of financial freedom
- 75% of women are less confident than men (67%) is being able to achieve financial freedom.

**Common Financial Mistakes on Savings:**
- 39% Investing without having a goal
- 10% Poor Savings
- 15% Liquid Investments
- 15% Mixing life insurance and investments
- 10% exotic financial products with poor returns

- S.S. Ramsundar, Source: Scripbox, July 2020 - Financial Freedom Survey.



• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633
Prop.: B.S. Rajan



காய்ச்சல், இருமல், சளி, வறண்ட தொண்டை இருநாட்களுக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக மருத்துவரை அணுகவும்.




https://youtu.be/-JMVniVMLr0

# ஆன்லைன் உணவகம்

## நம் சமூக மக்கள் புரிந்து செயல்பட வேண்டியது...




**கத்தியின்றி ரத்த மின்றியுத்த மொன்று வருகுது**
**சத்தி யத்தின் நித்தி யத்தைநம்பும் யாரும் சேருவீர்**

என்னும் பாடலை உப்புச் சத்தியாகிரகத் தொண்டர்களின் வழிநடைப் பாடலாகப் பாடிச் செல்வதற்கு நாமக்கல் கவிஞர் இயற்றிக் கொடுத்தார்.

தொழிற் சாலையுமின்றி கடையுமின்றி வந்துவிட்டது. தொலைத் தூரத்திலிருந்து ஆட்டிப் படைக்கும் ஆன்லைன் என்று சொல்லும் வண்ணமுள்ளது இன்றைய ஆன்லைன் வர்த்தக வளர்ச்சி.

ஆன்லைன் பற்றிய அறிமுகமில்லை என்றால் எதுவும் அறியா மானிடராகத் தான் பலரும் பார்க்கும் நிலை விரைவில் வந்துவிடும். இனிவரும் காலங்களில் ஆதி முதல் அந்தம் வரை அனைத்தும் ஆன்லைனில் விற்பனை மற்றும் சேவை வந்துவிடும்.

தற்போது கிட்டத்தட்ட 90 விழுக்காடுகளுக்கு மேல் ஆன்லைனைப் பற்றிய புரிதல் வந்ததற்கு காரணம் கொரோனா தான் என்றால் மிகையாகாது.

ஆரம்ப காலத்தில் தொலைபேசியில் அழைத்து, இருக்கும் இடமும், செல்ல வேண்டிய இடத்தைச் சொன்னால், சேவைக் கிடைத்து வந்த டாக்ஸி துறை இன்று இருக்கும் இடத்தில் இருந்து மந்திரவாதிகள் மையிட்டு பார்த்து சொல்வது போல் செயலி மூலம் திரையில் செல்ல வேண்டிய இடத்தை தொட்டாலே போதும், நமக்கான டாக்ஸி தற்போது எந்த இடத்தில் இருக்கிறது, வருவதற்கு எவ்வளவு நேரமாகும், செல்லும் தூரம், அதற்கான கட்டணம், ஓட்டுநரின் அலைபேசி எண் என அனைத்தும் இருக்கும் இடத்திலேயே அந்த தொடுதிரையில் கிடைத்து விடுகிறது.

செயலி இல்லாமல் இனி எந்த செயலும் நடைபெற வாய்ப்பில்லை என்று சொல்லும் வண்ணம் உலகம் மாறிவருகிறது.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றே ஒன்று தான். தற்போது ஆன்லைன் வர்த்தகத்தில் உலகளவில் பெயர் பெற்று விளங்கும் ஒரு சில நிறுவனம் தொழிற்சாலை அமைத்து பொருளாக எதையும் உற்பத்தி செய்வதில்லை. கடைகளைத் திறந்து பொருட்களை வாங்கி விற்பதும் இல்லை. அவர்கள் வடிவமைத்தது செயலியும், அதனை சந்தைப்படுத்தும் யுக்தி மட்டுமே. அதுவே அவர்களின் மூலதனம்.

ஆரம்ப காலத்தில் ஆடம்பரப் பொருள்களை நோக்கி நகர்ந்து இத்துறை தற்போது அத்தியாவசியப் பொருட்களையும் இணைத்துக் கொண்டுவிட்டனர். ஏதோ ஒரு மூலையில் இருந்து கொண்டு மற்றொரு மூலையில் உள்ள பொருட்களை வேண்டிய நபர்களிடம் சேர்க்கும் பாலமாக இவர்களின் செயல்பாடுகள் இருக்கின்றன.

கணவன், மனைவி வேலைக்கு செல்லும் குடும்பம் மற்றொன்று பிள்ளைகள் வெளியூரிலோ அல்லது வெளிநாட்டிலோ என இரு பிரிவுகளாகத் தான் தற்போதைய குடும்பங்கள் இருந்து வருகின்றன. இவர்களை மையப்படுத்தித் தான் தற்போதைய சந்தையையே தீர்மானித்து பலவிதமான சேவைகளை அறிமுகப்படுத்தி வருகின்றனர் இது போன்ற நிறுவனத்தார். இவர்களை நம்பி தொழில் தொடங்குபவர்களும், ஏற்கனவே தொடங்கியவர்கள் இவர்களால் சிறப்பாக நடத்தி வருபவர்களும் இருக்கிறார்கள். இதனை மறுப்பதற்கில்லை.

பெரிய நிறுவனமோ, சிறிய நிறுவனமோ உற்பத்தி செய்யும் பொருட்களை அவரவர் வசதிகேற்ப சந்தைப்படுத்தி வந்த காலம் போய் எந்த ஒரு பொருளையும் உலகம் முழுவதும் சந்தைப்படுத்தலாம் என்ற நிலையைக் கொண்டு வந்தவர்கள் தான் இது போன்ற நிறுவனத்தார். ஏனெனில் இவர்களுக்கு உற்பத்தி செய்யவோ அல்லது வாங்கி விற்பதற்கோ மூலதனம் தேவையில்லை. பெரிய நிறுவனங்கள், ஏற்கனவே உள்ள தங்களது விநியோகஸ்தர்களைத் தவிர்க்காமல் ஆன்லைன் விற்பனைக்கென்றே மாடல்களை வெளியிடுகின்றனர். ஆன்லைனில் கிடைக்கும் மாடல்கள் கடைகளில் இருப்பதில்லை. இது போன்ற செயலியில் நமது பொருட்கள் கிடைக்கச் செய்வது, பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவும் ஒன்று என்ற நிலை தான்.

ஏனெனில் ஆரம்ப காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு வேண்டியப் பொருள்களைக் கொடுத்து விற்பனை செய்து வரும் இது போன்ற நிறுவனங்கள், காலப்போக்கில் இவர்கள் விரும்பும் பொருட்களை வாடிக்கையாளர்களை விரும்பி வாங்க வைத்துவிடுவார்கள். இது முற்றிலும் நிதர்சனமாக நடைபெற விருக்கும் உண்மை. இதனை தற்போது புரிந்துகொள்வதும், புரிந்து கொள்ள வைப்பதும் மிகவும் கடினம்.

ஆரம்ப காலத்தில் கிழக்கிந்திய கம்பெனி இங்கு வியாபாரம் ஆரம்பித்தப் பின் நம்மை அடிமையாக்கியது போல், முதலில் நம் பொருட்களை விற்பவர்கள் பிறகு அவர்கள் விரும்பியப் பொருட்களை வாடிக்கையாளர்களை வாங்க வைப்பார்கள். நாமும் அதனை வாங்கப் பழகியும் இருப்போம்.

இது எப்படி சாத்தியம்... இதோ ஒரு உதாரணம்...

தற்போது உணவு வழங்கும் சேவையை செய்து வரும் ஊபர் ஈட்ஸ், சுவிக்கி, ஜொமாட்டோ போன்ற நிறுவனங்கள் ஆரம்பத்தில் வாடிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கும் உணவு வகைகளைச் சேமித்து வைத்துக்கொள்வார்கள். அவர்கள் எப்போதெல்லாம் செயலியில் ஆர்டர் கொடுக்கிறார்களோ அப்போதெல்லாம் நிறுவனத்திற்கு லாபம் தரக்கூடிய அவர்கள் நாட்டு உணவு வகைகளை பாப் விண்டோவில் அடிக்கடி




காட்டுவார்கள். அந்த பொருட்கள் வெளிச்சந்தையில் இருக்கும் விலையை விட பாதி விலைக்கு கிடைக்கும் என காட்டுவார்கள்.

பல நாள் நடக்கும் இச்செயலால் வாடிக்கையாளர் ஒரு முறை இந்த உணவைத் தான் வாங்கி உண்போமே என்ற எண்ணத்தில ஆரம்பிக்கும் இந்த செயல், நாளடைவில் இது போன்ற உணவுகளையே உண்ண வைக்க அனைத்து வகையான முயற்சிகளையும் மேற்கொள்வார்கள்.

10 ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் வசிக்கும் மக்களின் இரவு உணவுகள் எங்களின் முடிவாக இருக்கும் என்று ஒரு செயலியின் நிறுவனத்தார் விளக்கம் அளித்துள்ளதாக சித்த மருத்துவர் திரு. சிவராமன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான நம் சமூக மக்கள் சிறிய வகையிலான உணவகங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுடைய தயாரிப்புகள் நம் சமூகத்தைத் தாண்டி அனைத்து சமூக மக்களுக்கும் விருப்பமான உணவாக இருந்து வருவதை யாரும் மறுப்பதற்கில்லை. நம் சுவையான உணவைச் சாப்பிட நெடுந்தூரம் நடந்து வருவதும், வாகனத்தில் வருவதும் கண்கூடாகப் பார்க்கிறோம்.

கடந்த நான்கு, ஐந்தாண்டுகளாக மதிய நேரத்தில் குழம்பு, ரசம், காய்கனிகள், அசைவ வகைகள் என அனைத்தையும் தனித்தனியாக விற்று வருகின்றனர். ஆரம்பகாலத்தில் நகர்புறங்கள் ஆக்கிரமித்திருந்த இந்த சேவையானது தற்போது அனைத்து இடங்களிலும் பரவி வருவதைப் பார்க்க முடிகின்றது. இது போல எந்த ஒரு புதிய முயற்சிக்கும் முதலில் விதை விதைத்தது நம் சமூகம்தான். ஆனால் பிற்காலத்தில் அதனை மிக நன்றாக அறுவடை செய்வது வேற்று சமூகம் என்பது தான் வேதனையான விஷயம்.

25 ஆண்டுகளுக்கு முன் இட்லி மாவை அரைத்து ஒரு கப் ரூபாய் 1.00க்கு விற்க ஆரம்பித்தவர்கள் நம் சமூகத்தினர். ஒரு ஏரியாவிற்கு ஒருவர், இருவர் இருந்த நிலையில் தற்போது தெருவிற்கு நான்கு நபர்கள் இருப்பதைக் காணமுடிகிறது. இருக்கும் இடத்திலேயே பலர் விற்க சிலர் சைக்கிள்களில் சென்று வீதி வீதியாக மாவு விற்று வருகிறார்கள். இவர்கள் நாள் ஒன்றுக்கு 50 முதல் 100 கிலோ விற்றாலே அதிசயம் என்பவர்கள் பலர் இருக்க இட்லி, தோசை மாவு பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் கொடுத்து மதுரையில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் கிலோ வரை அண்ணாச்சி என்ற இட்லி மாவு பாக்கெட் விற்பனை ஆகி வருகிறது.

அதே போன்று தான் புளியோதரை பேஸ்ட் ஆரம்பத்தில் ஒரு சிலர் இந்த பேஸ்டை தயாரித்து விற்பனை செய்து வந்த நிலையில், தற்போது பலரும் தயாரித்து விற்பனைச் செய்து வருகின்றனர்.

இது போல பல உணவு வகைகள் நாம் வகைப்படுத்தலாம். எளிதாக கிடைக்கும் எந்த வாய்ப்பும் எளிதாக மறைந்தும் போகும், மறந்தும் போகும் என்பது அனுபவப் பூர்வமாக நம் முன்னோர்கள் நமக்கு கற்றுக்கொடுத்த பாடம்.

ஆனால் நம் சமூக மக்கள் பலர் சிறிய அளவில் எளிதான வியாபாரங்களையே செய்து வருகின்றனர். இது போன்ற குறைகளைக் களையச் செய்து நம் சமூக மக்கள் வியாபாரத்தில் கலக்க வேண்டாமா.... சைவம் மட்டுமின்றி அசைவ உணவு வகைகளிலும் புகழ்பெற்றும் இருக்கும் நம் சமூகத்தினர் சிலர் உபர் ஈட்ஸ், சுவிக்கி, ஜொமாட்டோவில் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளூரிலேயே தயாரித்து, உள்ளூர் மக்களுக்காகவே சேவை செய்து வரும் நம் சமூக மக்கள் வெளிநாட்டு செயலிகளில் தங்கள் சேவையை ஏன் வாடகைக்கு விட வேண்டும்.

சற்று சிந்தித்தால், சற்று முயற்சித்தால், சற்று உழைத்தால், சற்று பெரிய எண்ணத்தோடு செயல்படுத்தினால் இது போன்ற செயலிகளை நாமே தயாரித்து நாமே நம் சமூக மக்களுக்கு மட்டுமல்லாமல் அந்தந்த மாவட்ட மக்களுக்கு சேவை செய்யலாமே. அவர்களைப் போல செயலி ஒன்று தான், சேவையும் ஒன்று தான். அவர்களைப் போல் நாம் உலகம் முழுவதும் விளம்பரப்படுத்தத் தேவையில்லை. நமக்கு நாமே என்ற திட்டத்தோடு நம் வாடிக்கையாளருக்குத் தெரிவித்தால் போதுமே.... தரமும், சுவையும், நல்ல சேவையும் இருந்தால் போதுமே நமக்கான வியாபாரம் நம்மை வந்தடையும்.

பெரும்பாலானோர் விதை விதைக்கும் போது கிண்டல் செய்வார்கள் அல்லது கவனிக்காதது போல் இருப்பார்கள். அந்த விதை மரமாக வளர்ந்து நிழல், காய், கனி தரும் போது தான் பார்ப்பார்கள், கவனிப்பார்கள், பின் நம்மால் இப்படி எல்லாம் செய்ய முடியுமா என்று நமக்கு நாமே திட்டியும், தம்மால் இப்படி எல்லாம் செய்ய முடியாது என்று சமாதானமும் செய்து கொள்வார்கள். எந்த ஒரு செயலுக்கும் இது தான் நிலை. ஆரம்பத்தில் கேலி செய்தவர்கள் வளர்ந்தபின் வசையும் பாடுவார்கள். வாழ்த்தவும் செய்வார்கள்.

வசைப்பாடுவதை மறந்து வாழ்த்துபெற நாம் செய்ய வேண்டியது **ஒருமைப்பட்டு செயல்படுவதே** ஆகும்.

– B.S. ஜெனார்த்தனன்

# பெண்களுக்கு சொத்துரிமை



அருண் மிஸ்ரா, எஸ். அப்துல் நஸீர், எம்.ஆர்.ஷா ஆகிய மூன்று நீதிபதிகளை உள்ளடக்கிய உச்ச நீதிமன்ற அமர்வு வழிகாட்டும் முன்னோடித் தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது. இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் 2005-ம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தமானது, இந்து கூட்டுக்குடும்பங்களின் பூர்வீகச் சொத்தில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமையை வழங்கியது.

அத்திருத்தமானது, முன்மேவு அதிகாரம் கொண்டது; அதாவது, திருத்தத்துக்கு முந்தைய காலத்துக்கும் அது பொருந்தும் என்கிறது உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு,

டெல்லியைச் சேர்ந்த வினீதா சர்மா தொடுத்த வழக்கில், இந்தத் தீர்ப்பை அளித்துள்ள உச்ச நீதிமன்றம், சொத்துரிமை கோரும் பெண்ணின் தந்தை குறிப்பிட்ட அந்தச் சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்ததற்கு முன்பு உயிருடன் இருந்தாரா என்ற கேள்வியால் அந்தப் பெண்ணின் சொத்துரிமை எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்று விளக்கம் அளித்துள்ளது.

இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 6 திருத்தப்பட்ட செப்டம்பர் 9, 2005-க்கு முன்னர் தந்தை, மகள் இருவருமே உயிருடன் இருந்தால் மட்டுமே மகளுக்குப் பூர்வீகச் சொத்தில் உரிமை உண்டு என்று இதற்கு முன்பு சில வழக்குகளில் தாம் வழங்கிய மாறுபட்ட தீர்ப்புகளையும் உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

எனவே, 2005 செப்டம்பர் 9-க்கு முன்னர் தந்தை இறந்து போயிருந்தாலும் தங்களது பூர்வீகச் சொத்தில் பங்குகோர மகள்களுக்கு உரிமையுண்டு என்பது உறுதியாகியுள்ளது.

இது தொடர்பில் நிலுவையில் இருக்கும் அனைத்து வழக்குகளையும் ஆறு மாதங்களுக்குள் முடிக்குமாறும் இத்தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்துச் சட்டங்களில் காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்திங்களோடு ஒப்பிடும்போது, இந்தத் தீர்ப்பானது மிகப்பெரிய மாற்றங்கள் எதையும் செய்துவிடவில்லை என்றாலும் ஏற்கெனவே செய்யப்பட்ட சட்டத் திருத்தத்தின் நோக்கத்தையும் பயனையும் விரிவுபடுத்தியுள்ளது என்ற வகையில் மிக முக்கியமானதாகிறது. – தி இந்து (த)

## இரங்கல்



O.N. பாலகிருஷ்ணன்
மறைவு: 06.09.2020

சேம்பரின் வளர்ச்சிக்கு பாராட்டுகளையும் தேவையான ஆலோசனைகளயைம் வழங்கி, லாப் ஸமாச்சார் மீது மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டு என்றும் எங்களின் உந்து சக்தியாக விளங்கிய திரு. O.N. **பாலகிருஷ்ணன்** அவர்களின் மறைவு... பேரிழப்பு...

அரசாங்க உத்தியோகத்தில் சர்வசாதாரணமாக புழங்கும் லஞ்சம் வாங்கும் பழக்கம் இல்லாத மனிதப்புனிதர்.... ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம். அவரை இழந்து தவிக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** 66 வயதான பெண்மணி நான், இரண்டு முழங்கை மூட்டிலும், தோள்பட்டையிலும், வலி உள்ளது. அவ்வப்போது வீக்கமும் ஏற்படுகிறது. பல நாட்டு மருந்துகள் எடுத்துக் கொண்டு குணமாகவில்லை. எனது நண்பர் உருளைக்கிழங்கு சாப்பிடுவதால் இந்த வலி உண்டாகிறது என்று கூறுகிறார். உருளைக்கிழங்கு சாப்பிட்டால் முழங்கை வலி வருமா?

**பதில்:** உருளைக்கிழங்கு சாப்பிட்டால் முழங்கை வலி வராது. முழங்கை வலிக்கும், உங்கள் உணவிற்கும் எந்தவித நேரடி தொடர்பும் இல்லை. உங்கள் முழங்கை வலியின் அடிப்படை காரணம் என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும். அதற்கு நீங்கள் மூட்டு நோய்களுக்கு உண்டான இரத்த பரிசோதனைகள் மற்றும் எக்ஸ்ரே எடுக்க வேண்டி இருக்கும். நீங்கள் ஒரு எலும்பு மூட்டு மருத்துவரை சந்தித்து ஆலோசனை செய்வது நன்று. – டாக்டர் K.N. சுப்பிரமணியன்,

வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436


வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!

SCT

MADURAI NO.1 ENTERTAINMENT CHANNEL

24X7 LOCAL TV CHANNEL IN MADURAI

Get in on Google Play Store

Sourashtra Cable TV SCT

விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்

94430 34009
99424 17417
98421 91906

sctchannelmdu@gmail.com

GSTIN : 33ADWFS4457J1ZD


கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுகுகளிலும் கழுவ வேண்டும்.



# புதிய சேவைத் தொழில் வாய்ப்பு

## நம் சமூக மக்களுக்கான தொழில் வாய்ப்பு

இந்த சேவைத் தொழிலானது நம் சமூக மக்களுக்கு மிகவும் பயனளிக்கும் தொழிலாக அமையும். காரணம், நம் சமூகத்தில் படித்த பல இளைஞர்கள் பலர் பணி நிமித்தமாக பல்வேறு ஊர்களில் / நாடுகளில் வசிக்கின்றனர். அவர்களின் பெற்றோர்கள் தனியாக எதையும் எதிர்கொள்ளும் சூழலை நம் அனைவரும் கண்கூட பார்த்திருப்போம். அவர்களுக்குத் தேவையான உதவிகளை அவர்கள் இருக்கும் இடத்திற்கே கொண்டு சேர்க்கும் இந்த அருமையான சேவைத் தொழிலை நம் சமூகத்தினர் ஏற்றுச் செய்தால் பயன் பெறலாம்.

கால மாற்றத்தின் அடிப்படையில் கடந்த சில காலங்களில் குறுகிய இடைவெளிகளில் புதுப்புது தொழில் வாய்ப்புகள் மலர்ந்த வண்ணமே உள்ளன. இப்படி உருவாகியுள்ள வாய்ப்புகளில் மிகவும் பிரபலமாகி இருப்பது அல்லது பலரின் கவனத்தை ஈர்த்திருப்பது உணவு டெலிவரி, மளிகை டெலிவரி, வாடகைக் கார் தொழில் மற்றும் ஆன்லைன் நிறுவனங்களின் சேவைகள் போன்றவை.

அறியப்படாமலிருக்கும் ஒரு அருமையான வாய்ப்பு மூத்த குடி மக்களுக்கான சேவை. மூத்த குடிமக்களைப் பொறுத்தவரை அவர்களது அன்றாட வேலைகள் முதல் ஆரோக்கியம் வரை பலபிரிவுகளில் சேவைக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. முதியவர்களுக்கு உணவு தயாரித்து பரிமாறுவது முதல் இருப்பிடங்களை தூய்மை செய்து தருவது வரையிலான வாய்ப்புகள் மனதுக்கு நிறைவான வருமானம் தரும் வாய்ப்புகளாக அயல் நாடுகளில் பேசப்படுகின்றன.

அந்த வழியில் இந்தியாவிலும் இந்த வாய்ப்புகள் சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தொழில் ஆலோசகர்கள் பலரும் கருத்து தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். முதியோர்களது தேவைகளை அடிப்படையாகக் கொண்டே சமீப காலங்களில் இல்லங்களிலே பெரும்பாலான மருத்துவ சேவைகளை வழங்கிடும் ஹோம் ஹெல்த் கேர் இன்டஸ்ட்ரி என்றொரு துறையே பெரிய அளவில் உருவெடுத்துள்ளது.

வீட்டில் மருத்துவ சேவை என்பது அவ்வப்போது சில விமர்சனங்களை சந்தித்து வந்தாலும் வயதானவர்களுக்கு இது மிகவும் உகந்தது என்ற வகையில் இச்சேவைக்கான வரவேற்பு தொடர்ந்து பெருகி வருவதாக பல விவரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாகவே உலகம் முழுக்க உள்ள முதியவர்களில் நான்கில் ஒரு பங்கு மூத்த குடிமக்களுக்கு தங்களது சின்னச் சின்ன வீட்டு அலுவலகங்களில் கூட இன்னொரு நபரின் சேவை தேவையாகிறது. வீடுகளுக்கான பலதரப்பட்ட சேவைகளில் சுத்தப்படுத்தும் சேவைகளில் வயதானவர்களுக்கு பிற நபர்களின் தேவை மிகுதியாக இருக்கிறது. இதே போல போக்குவரத்து சேவைகளிலும் நிறைய வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது. நண்பர்கள், உறவினர்கள் சந்திக்க குதூகலமாக அவர்களை அழைத்து செல்லவும், உடல் நலக்குறைவு, மருத்துவர் சந்திப்புகளுக்கு மிக கவனமாக, அக்கறையாக அவர்களை கொண்டு செல்லவும் வேலை வாய்ப்புகளும் சமீப காலங்களில் அதிகரித்துள்ளது.

பரபரப்பான, எந்திரத்தனமான வாழ்க்கை முறையில் இயற்கையை ரசிப்பது பொதுவாக அனைவருக்குமே மிகவும் சிறந்த இளைப்பாறல் ஆக இருக்கிறது. வயதானவர்களுக்கு இவ்வகை இளைப்பாறல் மிக, மிக உற்சாகத்தை அளிக்கக் கூடியதாக இருக்கின்ற வகையில் தோட்டம் மற்றும் புற்களை அழகுபடுத்தும் வேலைகளுக்கும் தற்போது தேவை பெருகி வருகிறதாம்.

முதியவர்களுக்கு அப்பாற்பட்டு பல தரப்பினருக்கும் இந்த தோட்ட வேலைகளை செய்வதற்கான நேரம் குறைவாக இன்று இருக்கிறதால் முதியவர்களை இலக்கு வைத்து இச்சேவைகளை தொடங்கும் பட்சத்தில் மற்ற தரப்பு வாய்ப்புகளையும் தொழில் முனைவோர் பெற முடியும்.

முதியோர்களுக்கான சேவைக்கு நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வது ஒரு வகை என்றால், இன்னொரு வகை அவர்களுடைய வேலைகளை எளிதாக்கும் கருவிகள், உபகரணங்களை வியாபாரம் செய்வதும் இன்றளவில் சிறந்ததாகவே கூறப்படுகிறது. இதே போன்று அவர்களின் உயிர் உடமைகளை பாதுகாக்க உதவும் சிசிடிவி உள்ளிட்ட பாதுகாப்பு சாதனங்கள் வர்த்தகமும் நல்ல விறு, விறுப்பான தொழிலாக அமைய இன்று நிறைய வாய்ப்புகள் உள்ளன.

முதியவர்களுக்கான சிறப்பு மருத்துவக் காப்பீடு திட்டங்களை அவர்களிடம் கொண்டு சேர்க்கும் இன்சூரன்ஸ் ஏஜெண்ட் தொழில் வாய்ப்பு நல்ல வாய்ப்பாகவே குறிப்பிடப்படுகிறது. இவை தவிர முதியோர்களுக்கான முடி, நகம் மற்றும் இதர சலூன் சேவைகளை செய்யக் கூடிய நடமாடும் சலூனாக தொழில் முனைவோர் செயல்படுவதும் சிறப்பாகிறது.

இதனடிப்படையில், அவர்களுக்கான ஊட்டச்சத்து ஆலோசனைகளில் கூட வருமான வாய்ப்புகள் உருவாக்கிக் கொள்ளலாம். ஆங்கில மருத்துவம் சார்ந்த ஊட்டச் சத்து ஆலோசனைகள் மட்டும் என்றில்லை. இயற்கை உணவுகள் உடற்பயிற்சி முறைகள் ஆலோசனைகளை அளிக்கும் பணிகளையும் மேற்கொள்ளலாம். இந்த வழியில் உடலுக்கும், மனதுக்கும் நல்ல மருந்தான நம் பாரம்பரிய கலை மற்றும் மருத்துவமான யோகாவை கற்றுத் தரும் பயிற்சியாளராக தயாராகிக் கொள்வதும் வருமான வாய்ப்புகளை பிரகாசமாக்கும்.

இவை தவிர, முதியோர்கள் அரும்பாடுபட்டு ஈட்டி வைத்துள்ள சேமித்து வைத்துள்ள பணத்தை பெருக்கும் வழிகளை அவர்களுக்கு எடுத்துரைக்கும் நிதி ஆலோசகர் சேவை உள்ளிட்ட மேலும் சில சேவைகளும் இன்றும், வரும் காலங்களிலும் நல்ல வருமான வாய்ப்பாக இருக்கக்கூடும் என்றே பரவலாக பேசப்படுகிறது.

– தமிழ் தொழில் உலகம்

கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுகுகளிலும் கழுவ வேண்டும்.

## புதிய கல்விக் கொள்கை - மூன்றவாது மொழி மாணவர்களுக்கு சுமையா?

தமிழ்நாட்டில் வாழ்வதற்கு தாய்மொழி தமிழும், இந்தியாவில் வாழ்வதற்கு ஆங்கிலமும் போதுமே, மூன்றாவது ஏன் தெரிந்து கொள்ள வேண்டும். மூன்றாம் மொழி படிப்பது மாணவர்களைத் துன்புறுத்தும் செயல். இரு மொழிகள் என்றால்தான் மாணவர்களுக்கு இலகுவானது என பலர் தெரிவிக்கின்றனர். பிரபலங்களும் மேடைகளில் இப்படி பேசுகின்றனர்.

அவர்களுக்கான பதில்:

ஐந்து வயதுவரை தாய்மொழியில்தான் கல்வி கற்க வேண்டும் என்கிறது புதிய கல்விக் கொள்கை. பிறகு, முதல் வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்புவரை விரும்பினால் தாய்மொழியிலேயே கற்கலாம். பிஞ்சு வயதில் மாணவர்களுக்கு எதைக் கற்றுக்கொடுத்தாலும் அது பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும் என்கிறது குழந்தைமை உளவியல். மூன்று மொழிகள் என்ன? ஏழு மொழிகளைக்கூட குழந்தைகள் கற்றுக்கொள்வார்கள் அவர்களுக்கு அது ஒரு சுமையல்ல.

## பள்ளி / கல்லூரிகள் தேர்வுகள் ரத்து மாணவர்கள் கவனத்திற்கு

சமீபத்தில், கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காரணமாக நமது தமிழக அரசு, மாணவர்களுக்கான தேர்வை ரத்து செய்தது. அவர்களின் நலனில் அக்கறை கொண்டு ஒரு சிறிய அறிவுரை கூறிக்கொள்ள வேண்டும்.

தேர்வெழுதாமல் கல்விச்சான்றுகளைப் பெறும் நம் மாணவர்கள் தமது அறிவையும், திறமைகளையும் சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். படிப்பில் தெரியாத விஷயங்கள் எவ்வளவோ இருக்கலாம். கொரோனாவால் கிட்டியுள்ள இந்த பொன்னான காலத்தை கற்பதற்காக செலவிட வேண்டும். ஆசிரியர் இல்லையே என எண்ண வேண்டாம். கணினியும் இணையமும் மிகவும் உதவியாக இருந்து ஆசிரியர் இல்லாத குறையினைப் போக்கும். இணைய வழி வகுப்புகளை விளையாட்டாக எடுத்துக்கொள்ளாமல் கற்றலில் மேன்மை காண பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

புதிய மாற்றத்தை எதிர்கொள்ளும் முதல் தலைமுறை மாணவர்கள் நீங்கள். ஆகவே, சளைக்காமல் எதிர்கொள்ள தயாராகுங்கள்.

## வாட்ஸ்ஆப் பிஸினஸ் செயலியில் டிஜிட்டல் பேமண்ட் வசதி அறிமுகம்

வாட்ஸ்ஆப் பிஸினஸ் செயலியில், வியாபாரம் செய்பவர்கள் தங்கள் பொருட்களைப் பற்றிய விலை, அமைப்பு உள்ளிட்ட விவரங்களை இதில் சேர்க்கலாம். தற்போது பணம் செலுத்துவதற்கான வசதியையும் வாட்ஸ்ஆப் அறிமுகம் செய்துள்ளது.

கூகுள்-பே செயலியைப் போல தனிப்பட்ட நபர்களுக்குள் அல்லது வாட்ஸ்ஆப் செயலியுடன் இணைந்திருக்கும் வியாபாரச் சேவைகளுக்கோ பணத்தை அனுப்பலாம். இது உள்ளூர் சிறு வியாபாரிகளுக்கு உதவியாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இப்போதைக்கு இந்தச் செயலியில் டெபிட் அல்லது கிரடிட் கார்டுகளை பேமெண்டுக்காகப் பயன்படுத்தலாம். தனிப்பட்ட பயனர்களுக்கு இந்தச் சேவை இலவசமாக வழங்கப்படுகிறது. ஆனால், வியாபாரிகள் கிரெடிட் கார்ட் பரிவர்த்தனைக்குப் பணம் கட்டுவதைப் போல ஒரு கட்டணத்தை இதற்கும் செலுத்த வேண்டியிருக்கும். இப்போதைக்கு

பிரேசிலில் இது பயன்பாட்டுக்கு வந்துள்ளது. விரைவில் இந்தியாவிற்கும் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தாமதமாகும் சரக்கு மற்றும் சேவை வரி நிகர கடன் மீது வட்டி

தாமதமாகும் சரக்கு மற்றும் சேவை வரி கட்டணம் மீதான வட்டி தொடர்பான 25 ஆகஸ்ட் 2020 தேதியிட்ட வெளியீட்டு எண் 63/2020 - மத்திய வரி அறிவிக்கை, சில தொழில்நுட்ப வரம்பெல்லைகளின் காரணமாக வருங்காலத்தை மனதில் கொண்டு வெளியிடப்பட்டதாக மத்திய மறைமுக வரிகள் வாரியம் தெளிவுபடுத்தியுள்ளது.

அதே சமயம், சரக்கு மற்றும் சேவை வரி குழுவின் 39வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி, மத்திய மற்றும் மாநில வரி நிர்வாகங்களால் கடந்த காலத்துக்காக எந்த வசூலும் செய்யப்பட மாட்டாது என்று அது உறுதியளித்துள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி குழுவால் முடிவு செய்துள்ளபடி, வரி செலுத்துவோருக்கு முழு நிவாரணத்தை இது உறுதி செய்யும்.

25 ஆகஸ்ட், 2020 தேதியிட்ட அறிவிக்கை தொடர்பாக, தாமதமாகும் சரக்கு மற்றும் சேவை வரி கட்டணத்தின் நிகர கடன்பாட்டின் (பணமாக வழங்கப்படும் வரி கடன்பாடு) மீது 1 செப்டம்பர், 2020-ல் இருந்து வட்டி வசூலிப்பது குறித்து சமூக ஊடகங்களில் வெளியான கருத்துக்களைத் தொடர்ந்து, மத்திய மறைமுக வரிகள் வாரியம் இந்த விளக்கத்தை அளித்துள்ளது.



O.V.K. பாஸ்கரன்

TRC

தரமான டைல்ஸ்கள், சரியான விலையில் மன நிறைவுடன் வாங்க...

ரிஜென்சி டிரேடிங் கம்பெனி

5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம், சொக்கிகுளம், மதுரை-625 002.

செல் : 73737 21281, 98428 21281, 99449 05051

அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்


V.K. ஜெயசங்கர்

# கோத்ரம்

– B.S. ஜெனார்த்தனன்

ரிஷி என்பவர்கள் தனது தவ வலிமையால், இறைவனிலிருந்து வரும் ஒலி அலைகளை கிரகித்து உணர்ந்து வேத மந்திரங்களை இயற்றும் ஆற்றல் படைத்த தவ சீலர்கள் ஆவார். ரிஷிகளை மந்திரதிரஷ்டா என்பர். வேத மந்திரங்களின் சப்தத்தை உணர்ந்து அறியும் ஆற்றல் பெற்றவர்கள் என்று இதற்குப் பொருளாகும். தங்களால் அறியப்படும் வேதமந்திரங்களை ரிஷிகள் செய்யுள் வடிவிலும், சூத்ரங்களாகவும் அமைத்துப் பாடி வைத்தனர். ரிஷிகளின் தாங்கள் கண்டறிந்த ஒலி அலைகளை மந்திரங்களாகப் படைத்து வேத மந்திரங்களை அமைத்தனர். பின்னர் வந்த முனிவர்கள் தங்கள் வசதிக்காக வேதத்தை ரிக், சாமம், யஜுர் மற்றும் அதர்வண என நான்கு வேதங்களாகப் பிரித்தனர்.

ரிக் வேத கால ரிஷிகளில் புகழ்பெற்றவர்கள் விசிஷ்டர், விசுவாமித்திரர், பாரத்துவாஜர், வாமதேவர், அகத்தியர், ஆங்கிரஸர், கௌதமர், தீர்க்கதமஸ், மேதாதிதி முதலானவர்கள் ஆவார். பெண் ரிஷிகளில் புகழ் பெற்றவர்களாக லோபாமுத்திரை, மேதாதிதி, அபலா, கோஷா, ஜுகு, வாகம்பிரினீ, பௌலமி, யமி, இந்திராணி, சாவித்திரி மற்றும் தேவயானி என ரிக் வேதம் கூறுகிறது.

முதல் மன்வந்தரத்தில் இருந்த மரீசி, அத்திரி, ஆங்கிரஸ், புலஸ்தியர், கிரது, புலகர், வசிஷ்டர் என சப்தரிஷிகளைக் குறித்து மகாபாரத காவியம் கூறுகிறது. ரிஷிகளின் தவ வலிமைக்கு தக்கவாறு தேவரிஷி, பிரம்மரிஷி, மகரிஷி, இராஜரிஷி என அழைக்கப்படுகிறார்கள். தேவரிஷிகளில் நாரதரும், பிரம்மரிஷிகளில் வசிஷ்டரும், இராஜரிஷிகளில் விசுவாமித்திரரும், மகரிஷிகளில் வாமதேவரும் நன்கு அறியப்பட்டவர்கள்.

ரிஷிகள் இல்லற வாழ்க்கை வாழ்ந்தனர். வேத காலத்திற்கு பின்னர் தான் சந்நியாசம் என்ற ஆசிரம வாழ்க்கைத் தோன்றியது. மேலும் அமரகோசம் நிகண்டு துறவிகள் சந்நியாசிகள், முனிவர்கள், பிக்சுகள், பிரம்மச்சாரிகள், பரிவிவ்ராஜகர்கள், தபஸ்விகள், யதிகள் முதலானவர்களிடமிருந்து ரிஷிகளை முற்றிலும் வேறுபட்டவர்களாகக் கூறுகிறது.

ரிஷிகளின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு சில சமூகத்தினர் தங்களின் கோத்திரங்களைக் கொண்டுள்ளனர். ரிஷி பாரத்துவாஜரின் வழிவந்தவர்கள், தங்களை பாரத்துவாஜ கோத்திரத்தினர் என அழைத்துக் கொள்கிறார்கள். இந்தியா முழுமைக்கும் அந்தணர்கள் ரிஷிகளின் பெயர்களை கோத்திரங்களாக வைத்துக் கொண்டுள்ளனர். தமிழகத்தில் நமது சௌராஷ்ட்ரர் சமூகத்தினரும் ரிஷிகளின் பெயரைக் கோத்திரங்களாகக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோத்ர ப்ரவரான்வித – கோத்ரம் என்றால் வம்சம், ப்ரவரம் என்றால் பரம்பரை. ஒவ்வொரு மொழிபேசும் பிராமணர்களுக்கு ரிஷி கோத்ரம், பிரவரம் நூற்றுக்கணக்கான தலைமுறைகளாக விளங்கி வருகின்றன. பிராமணர் அல்லாத கூட்டத்தினரும் தமக்கென கோத்திரங்களுக்குப் பதில் மரம், பறவை, இடம் குறிப்பிட்ட பொருட்கள் ஆகியவைகளின் பெயர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். முக்கியமாகத் திருமண சம்பந்தங்கள் செய்யும் பொழுது, புராண, இதிகாசப் புகழ் பெற்ற சௌராஷ்ட்ர தேசத்திலிருந்து தென்னாட்டிற்கு வந்து சேர்ந்த சௌராஷ்ட்ர ஸமூகமாகிய நாம் ரிஷி கோத்திரங்களுடன், பிரவரங்களையும் பரம்பரையாகக் கூறி வருகிறோம்.

ஆரம்ப காலத்தில் 200 கோத்ரங்கள் இருந்ததாகவும், தற்போது தமிழ் பிராமண சமூகத்தில் நடைமுறையில் 38 கோத்ரங்களும், நமது சௌராஷ்ட்ர சமூகத்தில் 64 கோத்ரங்களும் இருந்து வருகின்றன.

1 ரிஷி, 2 ரிஷி, 3 ரிஷி, 5 ரிஷி மற்றும் 7 ரிஷி பரம்பரைகளாக இருந்து வந்துள்ளது. காலப்போக்கில் 1 மற்றும் 2 ரிஷி பரம்பரை உள்ளவர்கள் 3 ரிஷி பரம்பரையாகவும், 7 ரிஷி பரம்பரை ரிஷிகள் 5 ரிஷி பரம்பரை ரிஷிகளாகவும் மாற்றிக்கொண்டுள்ளனர். 4 ரிஷி, 6 ரிஷி பரம்பரை என்று ஆரம்ப காலக்கட்டத்தில் இருந்து இல்லை. தற்போது 3 ரிஷி பரம்பரை, 5 ரிஷி பரம்பரை என்ற பரம்பரையில் கோத்ரங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் அதற்குரிய நட்சத்திரம் தாரா, தேவதை, கணம், வாஹணம், பறவை, மரம், வான், ஆரிஷம் ஆகியவைகள் உண்டு. இவைகள் அனைத்தும் ஒன்றிணைத்த சமஸ்கிருத ஸ்லோகம் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் உண்டு. இவைகளே சௌராஷ்ட்ர ஸமூக கோத்திரங்களுக்குரிய தனிப்பெருஞ்சிறப்பு எனலாம்.

சௌராஷட்ஷ்ட்ரர்கள் யஜுர் வேதப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அதாவது யஜுர் வேதத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள். ஆபஸ்தம்ப ஸூத்திரத்தின் வைதீகச் சடங்குகளை நடத்திக் கொள்கின்றனர். வைதீகச் சடங்குகளின் போதும், உபகர்மத்தின், அதாவது பூநூல் மாற்றும் வைபவத்தின் போதும் கோத்திர, ரிஷி பிரவரங்களைக் கூறிக்கொள்வது கட்டாயமாக இருந்து வருகிறது. வான் என்றால் கோத்திரத்திற்கான குடும்பப்பெயர். இது தான் அடிப்பெயர் எனலாம்.

குடும்பப் பெயர்கள் பிற்காலத்தில் பட்டப்பெயர்களாக அதாவது தொழில், பழக்க வழக்கங்கள், பதவி, மூதாதையர் பெயர், ஊர்ப்பெயர் ஆகிய பல காரணங்களால் குடும்ப பெயர்கள் பெருகிவிட்டன. ஆனால் வைதீகச் சடங்கின் பொழுது கோத்திரங்களின் பெயர்களைத் தான் சுட்டிக்காட்டுகிறோமே தவிவர குடும்பப் பெயர்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. 64 கோத்திரங்கள் இந்த 8 வம்சத்தில் உள்ளவர்கள். இதில்

1. அகஸ்திய ரிஷி, 2. ஆத்ரேய ரிஷி, 3. ஆங்கிரஸ ரிஷி, 4. வசிஷ்ட ரிஷி, 5. விஸ்வாமித்ர ரிஷி, 6. மரீசி ரிஷி, 7. பார்கவ ரிஷி மற்றும் 8. சௌனக ரிஷி.

8 ரிஷி வம்சங்களில் பார்கவ மற்றும் விஸ்வாமித்ர ரிஷி வம்சத்தவர்கள் த்ரியாரிஷம் மற்றும் பஞ்சாரிஷத்தில் இருப்பவர்கள். மற்ற ரிஷிகள் த்ரியாரிஷம் அதாவது மூன்று ரிஷி வம்சத்தவர்கள். வேதங்களின் படி ஒரே கோத்திரத்தில் பிறந்த ஆணும் பெண்ணும் சகோதர சகோதரிகளாவர்.

ஆகையால் ஒரே கோத்திரத்தில் பிறந்தவர்கள் ஒருவரை ஒருவர் திருமணம் செய்வது சமயப்படி குற்றமாகும். இப்படி செய்தால் என்ன ஆகப்போகிறது. தற்போதைய காலக்கட்டத்தில் சித்தப்பா, பெரியப்பாவின் பேர, பேத்திகள் யாரென்றும் தெரிந்துகொள்வதில் சிக்கல் ஏற்படும் போது, திருமணத்திற்கு ஆணுக்கு பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் அமைய கடினமான இச்சூழலில் இது தேவைதானா.... காண்போம் அடுத்த இதழில்.

தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டால்
இந்நோய் பரவலை கட்டுப்படுத்த முடியும்.

# வாழ்வை வளமாக்கும் சிந்தனைகள்

- நாணயமாக இருப்பவனிடம் எப்போதும் குழந்தைத்தனம் காணப்படும்.
- உன் தகுதி பிறருக்குத் தெரிய வேண்டுமானால் பிறர் தகுதியை நீ தெரிந்துகொள்.
- திருட்டுப் பொருளை விலைக்கு வாங்குபவன் திருடனை விட மோசமானவன்.
- தூக்கம் எப்போது குறைய ஆரம்பிக்கிறதோ அப்போதுதான் வாழ்க்கை ஆரம்பிக்கிறது.
- அறிவுக்காக செய்யப்படும் முதலீடு எப்போதுமே நிறைய வட்டியையே தரும்.
- நல்ல மனைவியை விட உயர்ந்த வரமும் இல்லை. கெட்ட மனைவியை விட மோசமான சாபமும் இல்லை.
- முதலில் மனிதன் மதுவைக் குடிக்கிறான். பின்பு மது மனிதனை குடிக்கிறது.
- ஆயிரம் பேர் சேர்ந்து ஒரு தொழிற்சாலையைக் கட்டி விடலாம். ஒரு வீட்டைக் கட்ட ஒழுக்கமான ஒரு பெண் வேண்டும்.
- இரண்டு கால் உள்ள எல்லோரும் நடந்து விடலாம். ஆனால் இரண்டு கை உள்ள எல்லோரும் எழுதிவிட முடியாது.
- உழைப்பு உடலை வலிமையாக்கும். துன்பங்களே மனதை வலிமையாக்கும்.
- ஒருவன் தான் செய்த தவறை ஒத்துக்கொள்ள வெட்கப்படக் கூடாது. ஒப்புக்கொள்வதன் பொருள் என்ன? அவன் நேற்றைவிட இன்று அதிக அறிவு பெற்று விட்டான் என்பதே.
- வாழ்க்கை சுவையானது. உங்கள் அறியாமையினாலே அதை நரகமாக்கி விடாதீர்கள்.
- பிறரைப் பாராட்டுங்கள். பாராட்டு கிடைக்கும். பிறரை மதியுங்கள். மதிப்புக் கிடைக்கும். அன்பு செலுத்துங்கள். அன்பு தேடி வரும். இவை ஒற்றைவழிப் பாதைகள் அல்ல. இரட்டை வழிப்பாதைகள். அன்பில் வணிகத்திற்கு இடமில்லை. வணிகத்தில் அன்புக்கு இடமில்லை.
- தனக்கென வாழ்ந்தவன் தாழ்ந்தவன் ஆகிறான். பிறருக்கென வாழ்பவன் பெருவாழ்வு வாழ்கிறான். அடக்கம் அணிகலன் மட்டுமல்ல. அறத்தின் காவலன்.



- சொற்கள் நம் சிந்தனையின் ஆடைகள். அவற்றைக் கந்தல்களாகவும், கிழிசல்களாகவும், அழுக்காகவும் உடுத்தக் கூடாது.
- சோம்பேறிக்கு எல்லாமே கடினமாகத் தோன்றும். ஊக்கமுள்ளவனுக்கு எல்லாமே எளிதாகத் தோன்றும்.
- எந்தவிதக் கொள்கையும், நோக்கமும் இல்லாத வாழ்க்கை திசைகாட்டும் கருவி இல்லாத கப்பல் நடுக்கடலில் நிற்பதற்கு ஒப்பாகும்.
- எந்த மனிதன் தீவிரமாகவும், திடமாகவும், சிந்திக்கிறானோ அந்த சிந்தனைகளின் வளர்ச்சி கலையாககும். அவ்வாறு சிந்திக்கிறவனே கலைஞன் ஆவான்.
- பல அறிஞர்களுடன் பழகினால் நீ அறிவாளி ஆவாய். ஆனால் பல பணக்காரர்களுடன் பழகினாலும் பணக்காரன் ஆக மாட்டாய்.
- இன்பத்தின் இரகசியம் எதில் அடங்கியிருக்கிறது தெரியுமா? நீ விரும்பியதைச் செய்வதில் அல்ல. நீ செய்வதை விரும்புவதில்தான்.


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

“ஷர்வ ரக்சன்” MRS
BEST NUMEROLOGIST

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்



FOR APPOINTMENT
98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்






ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...





மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

# ஸௌராஷ்ட்ர தாத்தா



கு.வே. பத்நாபய்யர்

தமிழ் தாத்தா **உ.வே. சாமிநாதய்யர்** போலவே ஸௌராஷ்ட்ர மொழி இலக்கியங்கள் பெரும்பாலும் நம்மிடையே இன்று தவழ காரணமானவர் **கு.வே. பத்நாபய்யர்.**

மதுரையைச் சேர்ந்த இவர் 1894ம் ஆண்டில் பிறந்து 1973ம் ஆண்டுவரை வாழ்ந்தவர். இவர் ஸ்ரீ சுகந்த தூபதீர்த்தாயர்யர், சதுர்வேதி லட்சுமணாச்சாரியார், ஸ்ரீஸ்ரீநிவாசாச்சாரி, வரகவி வேங்கடசூரி, சேலம் புட்டா. அழகார்யர், மேதாவி இராமராய் ஆகியோரின் படைப்புகளை ஸௌராஷ்ட்ரீ, தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இவரை ஸௌராஷ்ட்ர தாத்தா என்றே கூறலாம்.

தமிழில் தெய்வப்புலவராம் **திருவள்ளுவர்** படைத்த திருக்குறளை இலக்கணம் கருத்துக்கள் என்று எவ்வித மாற்றமுமின்றி 1330 குறளையும் அப்படியே ஸௌராஷ்ட்ர மொழியில் மொழி பெயர்த்தவர் **எஸ்.எஸ். சங்குராம்.**



எஸ்.எஸ். சங்குராம்.

இவர் 1907-ல் பிறந்தவர். மறைவு - 1976. ஸ்ரீத்$^{3}$வின் என்ற பெயரில் ஸௌராஷ்ட்ரர்கள் இடையில் இன்றைய தினம் பரவலாக படிக்கப்பட்டு வருகிறது. இன்றைய இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் படைப்புகளில் ஸ்ரீத்$^{3}$விந் கருத்துக்களை லாவகமாக கையாண்டு வருகிறார்கள்.

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.09.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

TÜV INDIA
TÜV NORD GROUP
An ISO 9001:2015 Certified Company

THE CONSTRUCTIVE COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

Some of our Completed Projects






HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்

Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard



Technical Details :
- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm

Applications :
- Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
- Blankets • Made Ups • Shirting










N.S. Rajan

SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com


T.S. Saravanan